# எதிரொலி

ETHIROLI

ஆஸ்திரேலியா

குரல் 05 அதிர்வு 56 மாசி 2022 editor@ethiroli.com தொ.பே:1800 960 162










# ஆக்கிரமிப்புக்கு எதிரான அரை நூற்றாண்டு போர்









ஆஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் தமிழ் மாத இதழ்

# ROYAL INTERNATIONAL MONEY TRANSFERS

EASY • FAST • SAFETY

## நாணயமிக்க பணப்பரிமாற்றம் 'டன்டிநொங்' இல் புதியதோர் சேவை

BOC ලංකා බැංකුව இலங்கை வங்கி

PEOPLE'S BANK

COMMERCIAL BANK

HNB

සම්පත් බැංකුව சம்பத் வங்கி Sampath Bank

UNION BANK

Amãna Bank It's Your Bank

Same day bank transfer

No One Beat Our Rate

THE HUB ARCADE
4/131-147, Walker Street, Dandenong VIC 3175

(03) 87649143 0406409403
royalinfomoney@gmail.com


ISODIA TAX
ACCOUNTING AND TAX
QUALIFIED TAX AGENTS
TAX PRACTITIONERS BOARD REGISTERED
CHARTERED ACCOUNTANTS AUSTRALIA + NEW ZEALAND
வரி கணக்கை தாக்கல் செய்ய
$99
மட்டுமே
எங்கள் சேவைகள்
வருமான வரி தாக்கல்
வணிக வரி (BAS) தாக்கல்
வணிக எண்ணை (ABN) அமைத்தல்
சுயமாக நிர்வகிக்கப்படும் வருங்கால கருணைத்தொகை உதவி
(Setting up Self Managed Super Funds)
மேலும் விவரங்களுக்கு அழைக்கவும் !
03 8772 2557 | 0421 279 530 (DAN)
isodia.tax@gmail.com
THE HUB ARCADE, SUITE 4 SHOP 7 / 131 – 147 Walker St, Dandenong VIC 3175


PRAKAHS
GOLD BUYERS
தங்கம் ஈடு வைக்கும் நிலையம்
உங்கள் அவசரப்பணத்தேவைக்கு உடனடித் தீர்வு!
வட்டி விகிதம் 3%
தங்கம் வாங்கும் இடம்
டனிஸ்டன் 0421 279 530
127 Walker St, Dandenong, VIC-3175.
prakahsgold@gmail.com
www.prakahsgold.com
/PrakahsGold
MON- SAT 10 AM - 5:30 PM
CLOSED SUNDAYS AND PUBLIC HOLIDAYS

# தூரநோக்கு சிந்தனையும் தன்னிகரில்லா தலைமைத்துவமும்



தென்பாண்டி நாட்டான்

ஓர் இனத்தின் அடையாளத்தினை உலகறியச் செய்வது அந்த இனத்தின் தூரநோக்குச் சிந்தனையும் தன்னிகரில்லாத் தலைமைத்துவமுமே ஆகும். இதில் எங்கள் பார்வை குறைந்தால் நிச்சயம் நாம் எமது மொழி, பண்பாட்டு அடையாளங்களை தொலைத்து ஒருவரும் சிதைக்காமல் நாங்களாகவே சிதைந்து விடுவோம்.

தலைமைத்துவப் பண்புகள் பிறப்பில் வருவதா அல்லது அனுபவத்துடன் வளர்வதா என்று பார்த்தால் இரண்டு பக்கமும் வாதங்களை அடுக்கலாம். ஆனால் நிச்சயமாக ஒரு சிறந்த தலைவனால் பல தலைவர்களை உருவாக்க முடியும்.

தலைமைத்துவத்தினைக் கட்டிப் பிடித்துக் கொண்டு இருப்பவன் அல்ல தலைவன், மாறாகத் தலைவர்களை உருவாக்குபவனே தலைவன்.

சிந்தனை ஆக்கத்திற்குள் செல்லமுன்னர் மனதில் எழுகின்ற கேள்விகளைப் பார்ப்போம். அவைகளுக்கு விடைகளைத் தேட கட்டுரை தானாக வளரும்.

(1) எங்களுக்கு தூரநோக்குச் சிந்தனை இருக்கிறதா அப்படி இருந்தால் அது / அவை என்ன ? அரசியல் விடுதலை மட்டுமல்ல ஒரு இனத்தின் எழுச்சி அதில் மட்டும் தொங்கிக்கொண்டு எவ்வளவு காலம் ஓடப்போகிறோம் ?

(2) புலம்பெயர் நாடுகளில், புலம்பெயர்ந்துள்ள முதற் தலைமுறையினர், கோயில் மற்றும் சங்கங்களின் பதவிகளுக்கு அடி-படுவது இன்னும் எவ்வளவு காலம் வரை நீடிக்கும். அதற்கு பின்னர் கோயில்கள், சங்கங்களுக்கு என்ன நடக்கும் ? அந்தச் சங்கங்கள் அமைப்புகளின் ஆரம்ப நோக்கங்கள் மற்றும் விழுமங்கள் பின்பற்றப்படுகின்றனவா ?

(3) அடுத்த தலைமுறைத் தலைவர்களாக குறிப்பாக புலம்பெயர் நாடுகளில் இருக்கும் இரண்டாம் தலைமுறையினர் உள்வாங்கப்படுகிறார்களா? அதுபோல் இலங்கையில் சங்கங்கள், கட்சிகள், பொது அமைப்புகள் உண்மையில் இளையோரை உள்வாங்குகிறதா ?

(4) தலைமைத்துவ வளர்ச்சி, வரலாறு மற்றும் பண்பாட்டு மேன்மைக்கு நாங்கள் எவ்வளவு முதலீடுகள் மற்றும் உதவிகளைச் செய்கிறோம்? இருப்பிடம் உணவு போன்றவற்றை இல்லாதவர் களுக்கு கொடுத்தால் கடமை முடிந்ததா? எங்கள் மனது நிறைவடைய, மகிழ்வடைய உதவுகிறோமா அல்லது தூரநோக்குச் சிந்தனையுடன் உதவு-கிறோமா?

(5) பொது அமைப்புகளின் தலைமைப் பதவியை மற்றும் அவற்றின் சொத்துக் களை ஓரிருவருடன் மட்டுப்படுத்தி அவர் மறைவுக்கு பின்னர் அமைப்பினை அதன் நோக்கத்தினை முடிவுக்குக் கொண்டுவருவதா? வரலாறுகளில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டோமா?

(6) எல்லாவற்றையும் இயற்கை பார்த்துக் கொள்ளும், கடவுள் கைவிடமாட் டார், எங்கள் அர்பணிப்புகள் வீண்போகாது, எதோ ஒன்று நடக்கும், யாரோ ஒருவன் வருவான் என்று கடந்து செல்வதா ? இல்லை இயலுமானவரை சிந்தித்து செயலாற்றுவதா ?

இப்படியான கேள்விகளுக்கு தனி மனிதர்களாக நாங்களும், சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகளும், கோயில்கள் மற்றும் பண்பாட்டு நிறுவனங்களும் சிந்திக்கத் தொடங்கினால் தான், நாங்கள் எங்கள் எதிர்காலப் பாதையில் முதல் அடி எடுத்து வைக்கமுடியும்.

இம்முறை ஆக்கத்தில் "எங்களுக்கு தூர நோக்குச் சிந்தனை இருக்கிறதா அப்படி இருந்தால் அது / அவை என்ன ? அரசியல் விடுதலை மட்டுமல்ல ஒரு இனத்தின் எழுச்சி அதில் மட்டும் தொங்கிக்கொண்டு எவ்வளவு காலம் ஓடப்போகிறோம் ?" என்ற கேள்வியைத் தொட்டுச் செல்வோம்.

இதனைத் தனிநபர் மற்றும் குடும்பத் தில் இருந்து, சங்கங்கள், அமைப்புகள், கோயில்கள் ஏன் ஒட்டுமொத்த தமிழ் இனத்திடமே கேட்டால் என்ன பதில்களை எதிர்பார்க்கலாம் என்று பொதுவாகப் பார்ப்போம்.

இதனை தனி நபரிடம் கேட்டால், அரசவேலை அல்லது வெளிநாடு பின்னர் கலியாணம் மற்றும் ஒரு குழந்தை என்று தொடரும், தேசியவாதியிடம் கேட்டால் தமிழீழம் என்றும், சில கட்சிகளிடம் கேட்டால் 13 என்றும், வேறு சிலர் அது இல்லை ஒற்றை ஆட்சி என்றும், சங்கங்களி டம் கேட்டால் நிகழ்ச்சி வைப்பது, காசு சேர்ப்பது, வன்னிக்கு அனுப்புவது, சாப்பாடு கொடுப்பது, செருப்பு கொடுப் பது என்றும் பழைய மாணவர் சங்கம் என்றால் பாடசாலைக்கு நிறம் தீட்டுவது, புதிய சிறிய கட்டுமானங்களைச் செய்து பெயர் பதிப்பது, அவர் செய்ததை விட நான் கூட செய்தல் வேண்டும் என்று ஓடுவது என்று தொடரும், கோயில்கள் மற்றும் சமய அமைப்புகளைக் கேட்டால் மேலதிக பணம் எப்படி வசூலிப்பது, மண்டபம் கட்டுவது எப்படி, மேலும் காணிகளை வாங்குவது எப்படி, சில சமூக வேலைகளை செய்வது என்று தொடரும்.

இதில் எது சரி எது பிழை என்று யார் தீர்மானிப்பது, யாரும் கருத்துக்கள் சொன்னால் இவர் என்ன சொல்வது என்றே காலம் கடந்து போய்க்கொண்டிருக்கிறது. சில அமைப்புகளுக்கு தொடங்கும் பொது வடிவமைக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் அமைப்பு விழுமங்கள் இருக்கும் ஆனால் அதை யார் பார்க்கிறார்கள் அதன்படி யார் நடக்கிறார்கள் என்பது தான் மீண்டும் வினா வாகிறது.

எமது இனம் நீண்ட வரலாற்றினைக் கொண்டது. உலகிலே முதல் பண்பாட்டுடன் வாழ்ந்த, மூத்த மொழியினை பேசிய, பேசிக் கொண்டிருக்கும் தனித்துவமான இனம். வரலாற்றினை திரும்பிப் பார்த்தால் அவர்கள் அரசியல் மற்றும் போர்க் களங்களுடன் மட்டும் நின்றுவிடவில்லை. மேலாக பொருளாதாரம், கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சிகளையும் சரிசமமாக முன்னெடுத்தனர். அத்துடன் அக புற ஒழுக்கங்கள், வீரம், வழிபாடு, விழாக்கள், ஆடல், பாடல், ஓவியம், சிற்பம் என்று அவர்களின் வாழ்வியல் விரிந்துகொண்டே செல்லும். இன்றும் தமிழர் அடையாளம் என்றவுடன் தஞ்சைப் பெரியகோயில் தான் நினைவிற்கு வருகிறது. அத்துடன் அறி வியலுடன் கூடிய அவர்கள் வாழ்வியலும், வாழ்வியல் நெறியும் முன்னிற்கிறது. தமிழர் வாழ்வியல் நெறியாகிய அறிவியலு-டன் கூடிய செய்முறை வழிகளே ஆகமங்கள், வேதங்கள், சித்தமருத்துவம் என்று பல வடிவில் இன்றும் இருக்கின்றன.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்"**

இங்கு வாழ்வாங்கு வாழ்ந்தவர்களின் வாழ்வியல் வழிமுறைகளே வாழ்வியல் விஞ்ஞானம் ஆகிறது. வழிபாடுகளில் அது ஆகம விஞ்ஞானம் ஆகிறது, பயன்பாடுகளில் அது பொறியியல் நெறிகளாகின்றன.

ஆனால் நாங்கள் தற்போது அப்படிச் செய்கிறோமா? அரசியல் விடுதலை மட்டுமே எங்களின் தேவை என்று திடமாக நம்பி அது வந்த பின்னர் மற்றவற்றினைப் பார்ப்போம் என்று இலவு காத்த கிளியாக காலத்தினை மாய்க்கிறோம். உங்கள் நம்பிக்கையை விடச் சொல்லவில்லை ஆனால் மற்றத் துறைகளிலும் நாங்கள் வளர்ச்சி பெற வேண்டும் அதற்கான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கலாம் என்பதே எனது கருத்து.

இன அடையாளம் என்பது மிகவும் முக்கியமானது. அதில் அவர்கள் மொழி, பண்பாடு, வாழ்வியல் இவை எல்லாம் சேர்ந்த அவர்களின் நெறி (உதாரணமாக - சைவத்தமிழ் நெறி, சிங்கள பௌத்தம்) என்பன மிக முக்கியமானவை. இதில் இலங்கை நாட்டில் எவ்வாறு சிங்கள பௌத்த அடையாளங்கள் பேணிப் பாதுகாக்கப்படுகின்றன என்பதில் பல பாடங்களை நாங்கள் கற்கவேண்டும்.

தமிழர் அடையாளம் என்று பார்க்கும் போது, இரண்டாம் தலைமுறையில் எத்தனை பேருக்கு தமிழ் பேச, வாசிக்க, எழுதத் தெரியும். மொழி எனும் அடை யாளம் மெதுவாக இல்லாமல் போவது உணரமுடிந்தாலும், "மெல்லத் தமிழ் இனிச் சாகுமா அல்லது வாழுமா" என்று பட்டிமண்டபம் வைத்துவிட்டு, நாங்களே வாழும் என்று தீர்ப்பையும் கொடுத்துவிட்டு, தமிழ்போல் வாழ்க என்று சொல்லிவிட்டு, பட்டிமண்டபம் முடிய "டினர்" எடுத்துவிட்டு "குட்நைட்" சொல்லிவிட்டுப் போய் தூங்கினால் எப்படி தமிழ் வாழும். இது இப்படியிருக்க எப்படி இரண்டாம் தலைமுறையினர் மொழியை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லப் போகின்றனர். அப்படியான மொழியை அழியவிடாமல் அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல நாங்களும், தேசியம் பேசும் அரசியல் வீரர்களும் என்ன செய்கிறோம்.

அடுத்ததாக எங்கள் அடையாளமாக விளங்குவது, கோயில்கள் மற்றும் வரலாற்றுக் கட்டடங்கள் போன்றவையே ஆகும். ஆனால் இதில் கோயில்களை திருத்தினால் அல்லது கட்டினால், சிலர் கோயிலுக்கு கொடுக்கும் காசை, சாப்பாட்டுக்கு கொடுங்கோ என்று வீர-வசனம் பேசுவார்கள். அவர்களிடம் சாப்பாட்டுக்கு உதவி கேட்டுப்பாருங்கள், தருவதாய் சொல்லி தானாக மறைவார்கள்.

இன்றும் தமிழர் வாழ்ந்த இடங்களை அடையாளம் காண நடத்தப்படும் தேடல் களில் அங்கே சிவன் சிலை கிடைத்ததா, சிவலிங்கம் கிடைத்ததா, நந்தி போட்ட காசு கிடைத்ததா என்று தான் உடன் பார்க்கிறோம். சிந்துவெளி நாகரீகத்திலும் இதே கேள்விதான் எங்கள் பழமையை வெளிக்கொண்டுவரும். இப்படியிருக்கையில் இன்னும் நூறு வருடங்களுக்குப் பின்னர் அடையாள-மாக இருக்கப்போவது தற்போது உள்ள கோயில்களே. அவற்றினைத் திருத்துவது மற்றும் கட்டுவது எப்படி பிழையாகும் என்பதனையும் சிந்திக்கவேண்டும்.

பொதுவாக தற்போதும் கோயில்களில் நடைபெறும் பெருந்திருவிழாக்கள் மற்றும் விழாக்களில் தான் கலை மற்றும் பண்பாட்டு நிகழ்வுகள் அதிகமாக நடைபெறுகின்றன. இதனூடு தான் கலை பண்பாடு ஊடு கடத்தப்படுகிறது என்பதற்கு சிறிய உதாரணம் தவில் மற்றும் நாதசுவர இளம் கலைஞர்களும் அவர்களின் உலகப்புகழும். இப்படியான தமிழர் வாழ்வியல் நெறிகளைப் பின்பற்ற, வளர்க்க அடுத்த தலைமுறைக்கு ஊடுகடத்துவதற்கு என்ன மாதிரியான திட்டங்களை நாங்களோ அல்லது அரசி யல் தலைவர்களோ கொண்டுள்ளோம் என்று சிந்திக்கவேண்டும்.

அடுத்ததாக பொருளாதாரம் மற்றும் தன்னிறைவு. இந்த வகையில் தமிழர்களாகிய நாங்கள் (ஓரிருவரைத் தவிர) எந்தவகையில் வளர்ச்சி கண்டுள்ளோம், எவ்வாறான முதலீடுகளைச் செய்கிறோம், தூரநோக்கு பொருளாதார சிந்தனைகள் உள்ளனவா என்பதை ஆழமாக சிந்திக்கவேண்டும். எங்கு பார்த்தாலும் கலியாண மண்டபங்களும், கடைகளும் கட்டிவிடுவதே பொருளாதாரம் என்ற நிலைமை தான் எங்கும் பரவுகிறது. அப்படி பல மண்டபங்களில் திருமணங்களை ஆகி, குழந்தைகளை பெற்று சனத்தொகை கூடுகிறதா என்று பார்த்தால் அதுவும் இல்லை, மாறாக குறைந்து கொண்டே செல்கிறது.

அத்துடன் புலம்பெயர் தமிழ் மக்களும் மற்றும் இலங்கையில் வசிக்கும் வசதி படைத்தவர்களும் காணிகளை வாங்கி, அவற்றின் விலைகளை பன்மடங்காக்கி கோடியாக்கி விட்டிருக்கும் நிலையில், சாதாரண ஒரு குடும்பத்தினை சார்ந்தவர் எப்படி பிள்ளைகளுக்கு வீடு கட்டி கொடுக்க முடியும். ஏற்கனவே ஒரு பிள்ளையுன் நிறுத்தும் மனநிலையில் நடைபோடும் எங்கள் தமிழ்ச் சமூகத்திற்கு இப்படியான பொருளாதார நெருக்கடிகள் குறிப்பாக காணி விலை போன்றன இன்னும் குழந்தைகளின் எண்ணிக்கையை குறைத்து கடைசியில் ஒன்றும் இல்லாமல் போகும் நிலைதான் வரும். இவற்றினை சிந்தித்து, எல்லோரும் சேர்ந்து ஒரு பொதுவான வளர்ச்சிப் பாதைக்கான இலக்கணத்தினை வகுத்து அதன்படி நீண்டகால சிந்தனையில் பயணத்தினை தொடரவேண்டும்.

உதாரணமாக கல்வித்துறையில் பல தனி யார் பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்பக் கல்லூரிகள் போன்ற முதலீடுகள், விவசாயம், சுற்றுலாத்துறை மற்றும் பனைசார் என்று பல பாரிய முதலீட்டுத் திட்டங்களை சிந்திக்கும் காலம் விரைவில் வரவேண்டும்.

அரசியல் விடுதலை என்பதில் மட்டும் காலத்தினைப் போக்கினோமானால் கடை-சியில் அத்திப்பட்டிக் கதையாக மாறும் எங்கள் தமிழர் தேசம். ஆகவே இதனை சிந்தித்து சமூகமாகவும், சங்கமாகவும் ஏன் தனி மனிதனாகவும் உயரிய சிந்தனைகளுடன் செயற்படுவோம்.

**தொடரும்**

## இரண்டாம் தலைமுறையினர்



லேபர் கட்சி கவுன்சிலர் சாரங்கன் மகேஸ்வரன்



நோர்வே எம்.பி. கம்ஷி குணரட்ணம்



கனடா எம்.பி. விஜய் தணிகாசலம்


SRI KUMARAN
இது நம்ம கடை
INDIAN GROCERY SHOP
மிக விரைவில்... மிக பிரமாண்டமாய்...
Get Ready for Our
GRAND
OPENING
Shepparton I Tarneit | Clyde North

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI
குரல்:05 அதிர்வு: 56 மாசி 2022 தொ.பே:1800 960 162

# சர்வதேச கண்காணிப்பு பொறிமுறையே தீர்வுக்கு வழி!

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் சுவிஸ் தலைநகரான ஜெனிவாவில் இம்மாதம் 28 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. ஏப்ரல் முதலாம் திகதிவரை நடைபெறவுள்ள குறித்த மாநாட்டில் உலக நாடுகளின் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் விரிவாக ஆராயப்படவுள்ளதுடன், விவாதமும் இடம்பெறவுள்ளது. அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளரின் எழுத்து மூல அறிக்கையும் முன்வைக்கப்படவுள்ளது.

ஆபிரிக்க வலயத்தில் 13 நாடுகள், ஆசிய பசுபிக் வலயத்தில் 13 நாடுகள், மேற்கு ஐரோப்பியாவில் 7 நாடுகள், கிழக்கு ஐரோப்பாவில் 8 நாடுகள் என மொத்தம் 47 நாடுகள் பேரவையில் அங்கம் வகிக்கின்றன. இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை சுழற்சி முறையில் அங்கத்துவம் வழங்கப்படும். மேற்படி நாடுகளுக்கு வாக்குரிமை உண்டு. ஏனைய நாடுகள் கண்காணிப்பாளர்களாக பங்கேற்கலாம்.

அந்த வகையில் இம்முறை இலங்கை, மியன்மார், ஆப்கானிஸ்தான் உட்பட மேலும் சில நாடுகள் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்படவுள்ளது. அரச சார்பற்ற அமைப்புகளால் நடத்தப்படும் உப மாநாடுகளிலும் மேற்படி நாடுகள் முக்கிய இடத்தைப் பிடிக்குமென இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரால் முன்வைக்கப்படவுள்ள வருடாந்த அறிக்கையில், இலங்கை விவகாரம் தொடர்பிலும் பிரஸ்தாபிக்கப்படவுள்ளது. அது தொடர்பில் மார்ச் 03 ஆம் திகதி விவாதமும் இடம்பெறவுள்ளது.

சர்வதேச மட்டத்தில் ஜெனிவாக் கூட்டத்தொடரே இலங்கை சந்திக்கும் மிகப்பெரிய இராஜதந்திர சமராக இருக்கின்றது. குறிப்பாக 2012 ஆம் ஆண்டு முதல் இலங்கை தொடர்பில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுவருகின்றன. எந்தவொரு வாக்கெடுப்பிலும் இலங்கை வென்றதில்லை. எனினும், சீனா, ரஷ்யா, கியூபா உள்ளிட்ட நாடுகளின் ஆதரவுடன் அழுத்தங்களை சமாளித்துவருகின்றது.

இலங்கையில் இடம்பெற்றவை எனக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான செயற்பாடுகள் தொடர்பில் பொறுப்புக்கூறப்பட வேண்டும், பாதிக்கப்பட்ட தரப்புக்கு நீதி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிரச்சினை, போருக்கு பின்னரான காலப்பகுதியில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுவருகின்றது.

ஆரம்பத்தில் உள்ளகப் பொறிமுறை ஊக்குவிக்கப்பட்டாலும், அவற்றை செயற்படுத்துவதில் இலங்கை அரசு ஆமை வேகம் காட்டியது. இதனால் சர்வதேச சமூகம் கடும் அதிருப்தியில் இருந்தன. காத்திரமான தீர்மானங்கள் கொண்டுவரப்பட்டன. குறிப்பாக பொருளாதாரத் தடைக்கான நகர்வுகள் இடம்பெற்றுக்கொண்டிருந்த தருவாயிலேயே 2015 இல் முன்கூட்டியே மஹிந்த ராஜபக்ச தேர்தலுக்குச் சென்றார்.

அத்தேர்தலில் மஹிந்த தோல்வி கண்டார். இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மைத்திரி தலைமையில் உதயமான நல்லாட்சி அரசு, சர்வதேச சமூகத்துக்கு சாதகமான சமிக்ஞைகளை வெளிப்படுத்தியது. ஜெனிவாத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்கவும் இணங்கியது. இதனால் இலங்கைக்கு உள்ளகப் பொறிமுறையை செயற்படுத்துவதற்கு ஒன்றரை வருடங்கள் அவகாசம் வழங்கப்பட்டது.

அதன்பிரகாரம் இழப்பீட்டு பணியகத்தை அமைத்தல், நல்லிணக்க செயலணி, புதிய அரசமைப்பு, பயங்கரவாத தடைச்சட்டத்தில் திருத்தம் உள்ளிட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், இடைநடுவில் திட்டங்களை மைத்திரி தரப்பு குழப்பியது. சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதிகள் நிறைவேற்றப்படவில்லை.

மீண்டுமொருமுறை உள்ளகப் பொறிமுறை தோல்வி கண்டது.

இதனால் சர்வதேச பங்களிப்புடனான பொறிமுறையே வேண்டும் என்ற கோரிக்கை எழுந்தது. 2019 இல் ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான அரசு, நல்லாட்சி வழங்கிய இணை அனுசரணையை விலக்கிக்கொண்டது, அழுத்தங்கள் தொடர்ந்தால் மனித உரிமைகள் பேரவையில் இருந்து விலகுவோம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மறுபுறத்தில் பொறுப்புக்கூறும் பொறிமுறை செயற்படுத்தப்படவில்லை.

ஆகவே சர்வதேச சமூகம் தற்போது நடவடிக்கையில் இறங்குவதற்கு தயாராகிவிட்டன. இம்முறை வலுவானதொரு பிரேரணை வரும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதுவரைகாலம் சண்டித்தனம் காட்டிவந்த கோட்டா அரசு, தற்போது அவசர அவசரமாக காலில் விழுந்து ஆமாம் சாமி போடும் அனுகுமுறையை பின்பற்ற ஆரம்பித்துள்ளது.

வடமாகாணத்துக்கு வலிந்துசென்று, காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களை சந்தித்து உறுதிமொழிகளை வழங்கிவருகின்றனர். பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்தும் வர்த்தமானி அறிவித்தல் அவசரமாக வெளிவந்துள்ளது. பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலம் தடுத்து வைக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட்டுவருகின்றனர். படையினர் வசமுள்ள காணிகளும் விரைவில் விடுவிக்கப்படும் என்ற உத்தரவாதமும் வழங்கப்பட்டுள்ளது.

வழமையாக அழுத்தங்களை சமாளிப்பதற்காக ஜெனிவா கூட்டத்தொடர் ஆரம்பமாகும்போது, இலங்கை அரசு இவ்வாறான இராஜதந்திரக் கூத்துகளை காண்பிப்பது வழமை. அது சர்வதேச சமூகத்துக்கும் தெரியும். இம்முறை வெறுங்கையுடன் ஜெனிவா சென்றால் மீள முடியாது என்பதும் புரிந்துள்ளது. அதனால்தான் அவசர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. எது எப்படி இருந்தாலும் சர்வதேச பங்களிப்புடனான விசாரணைப் பொறிமுறையே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடுக்கும் என்பதுடன், பொறுப்புக்கூறல் பணியையும் சிறப்பாக செய்ய வைக்கும். அதேபோல இலங்கைக்கு இனியும் காலஅவகாசம் வழங்குவது பயனற்ற செயலாகவே அமையும். உறுப்பு நாடுகளும் இம்முறையேனும் ‘பூகோள அரசியலை’ மறந்து நீதியின் பக்கம் நிற்க வேண்டும்.

# நீதிக்கான ‘கறுப்பு ஜனவரி’

# எப்போது நியாயம் கிட்டும்?




● சுழியன்

ஜனவரி மாதமானது இலங்கையில் வாழும் ஊடகவியலாளர்களுக்குக் ‘கறுப்பு’ மாதமாகும். எனவேதான், ஊடகவியலாளர்களுக்கு எதிராக அரங்கேறிய குற்றங்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுமாறு, பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு ஜனவரி மாதத்தில் தொடர்ச்சியாக அழுத்தம் கொடுக்கப்பட்டுவருகின்றது.

அந்தவகையில் இவ்வருடமும் ஜனவரி மாதத்தில் வடக்கு, கிழக்கு, தெற்கு உட்பட பல பகுதிகளில் நீதிக்கான போராட்டங்கள் ஊடகவியலாளர்களால் முன்னெடுக்கப்பட்டன. இதற்கு பல தரப்புகளும் ஆதரவை வழங்கியிருந்தன. குறிப்பாக இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் ஜனவரி 28 ஆம் திகதி கொழும்பில் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. துண்டுபிரசுரமும் விநியோகிக்கப்பட்டது.

அதேபோல ஜனவரி 31 ஆம் திகதி யாழ். நகரிலும் கவனயீர்ப்பு போராட்டமும், துண்டுபிரசுர விநியோகமும் இடம்பெற்றது. இதற்கு யாழ். ஊடக மையம் உட்பட வடக்கில் செயற்படும் ஊடக அமைப்புகள் பூரண ஒத்துழைப்பை வழங்கியிருந்தன.

எதற்காக ஜனவரி மாதம் கறுப்பு ஜனவரியானது என்ற கேள்வி எழலாம். ஜனவரி மாதம் தேர்ந்தெடுக்கப்பட்டமையானது - ஏனைய மாதங்களில் குற்றச் செயல்கள் இடம்பெறவில்லை என்பதற்காக அல்ல, மாறாக ஜனவரி மாதத்திலேயே அதிகளவான குற்றச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

- 2009 ஜனவரி 06 ஆம் திகதி சிரச ஊடக நிறுவனம் மீது கிளைமோர் குண்டு தாக்குதல் நடத்தப்பட்டது.
- 2009 ஜனவரி 08 ஆம் திகதி சண்டே லீடர் பத்திரிகை ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்பட்டார்.
- 2006 ஜனவரி 24 ஆம் திகதி ஊடகவியலாளர் சுப்பிரமணியம் சுகிர்தராஜன் படுகொலை செய்யப்பட்டார்.
- 2010 ஜனவரி 24 ஆம் திகதி பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டார்.
- 2011 ஜனவரி 30 ஆம் திகதி லங்கா ஈ நியூஸ் அலுவலகம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.
- 2009 ஜனவரி 23 ஆம் திகதி ரிவிர பத்திரிகை ஆசிரியர் உபாலி தென்னக்கோன் மீது மிலேச்சத்தனமான தாக்குதல் நடத்தப்பட்டது.
- 2008 ஜனவரி 23 ஆம் திகதி ரூபவாஹினியைச் சேர்ந்த லால் ஹேமந்த மாவலகே மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

இவ்வாறு கடந்த காலங்களில் ஊடக நிறுவனங்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீது பல மிலேச்சத்தனமான தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதால் ஜனவரி மாதம் என்பது இலங்கை மற்றும் புலயம்பெயர் தேசங்களில் வாழும் இலங்கை ஊடகவியலாளர்களுக்கு ‘கறுப்பு’ மாதமாகும்.

2008 - 2015 காலப்பகுதிக்குள் ஊடகவியலாளர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட கொலைகள், தாக்குதல்கள், சித்திரவதைகள் தொடர்பான விபரம்.

### கொலைகள்

01. மயில்வாகனம் நிமலராஜன் 2000.10.19
02. ஐயாத்துரை ஜி நடேசன் 2004.05.01
03. கந்தசாமி ஐயர் பால நடராஜ் 2004.08.16
04. தர்மரட்ணம் சிவராம் 2005.04.28
05. ரேலங்கி செல்வராஜா 2005.08.12
06. சுப்பிரமணியம் சுகிர்தராஜன் 2006.01.24
07. சம்பத் லக்மால் டி சில்வா 2006.07.01
08. சுபாஷ் சந்திரபோஸ் 2007.04.16
09. செல்வராஜா ரஜிவர்மன் 2007.04.29
10. சகாதேவன் நிலக்சன் 2007.08.01
11. பரணி ரூபசிங்கம் தேவகுமார் 2008.05.28
12. லசந்த விக்ரமதுங்க 2009.01.08

### காணாமல் ஆக்கல்

01. சுப்பிரமணியம் இராமச்சந்திரன் 2007.02.15
02. பிரகீத் எக்னெலிகொட 2010.01.24

### தாக்குதல்களுக்கு இலக்கானோர்

01. டி எம் ஜி சந்திரசேகர 2007.12.27
02. லால் ஹேமந்த் மாவலகே 2008.01.25
03. கீத் நொயார் (கடத்தப்பட்டு தாக்குதல்) 2008.05.22
04. நாமல் பெரேரா 2008.06.30
05. ரதிகா தேவகுமார் (துப்பாக்கிச்சூடு) 2008.09.08
06. உபாலி தென்னக்கோன் - 2009.01.23
07. என். வித்தியாதரன் (கடத்தப்பட்டு தாக்குதல் ) 2009.02.26
08. போத்தல ஜெயந்த (கடத்தப்பட்டு தாக்குதல்) 2009.06.01
09. ஞானசுந்தரம் குகநாதன் 2011.07.29
10. மந்தனா இஸ்மாயில் (அச்சுறுத்தல்) 2013.08.23

### ஊடக நிறுவனங்கள் மீதான தாக்குதல்

01. சுடர் ஒளி பத்திரிகை நிறுவனம் - குண்டு தாக்குதல் 2005.08.29
02. உதயன் பத்திரிகை நிறுவனம் - தீ வைப்பு / துப்பாக்கிச்சூடு - 2006.6.2 / 2013.04.13
03. சியத நிறுவனம் தாக்குதல் - 2010.07.30
04. சிரச தொலைக்காட்சி நிலைய கட்டிடத் தொகுதி அழிப்பு - 2009.01.06
05. லங்கா ஈ நியூஸ் நிறுவனம் தீ வைப்பு - 2011.01.30

இந்த அட்டவணைக்குப் புறம்பாக, மேற்படி காலப்

(07ஆம் பக்கம் பார்க்க)

# நீதிக்கான 'கறுப்பு ஜனவரி'

# எப்போது நியாயம் கிட்டும்?

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகுதிக்குள் தகவல் அறியும் உரிமையை தடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் ஊடக சேவையாளர்கள், பத்திரிகை முகவர்கள், விநியோகத்தர்கள் மற்றும் அச்சுப் பிரிவு ஊழியர்கள் என 12 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். அதேபோல முறைப்பாடுகள் பதிவுசெய்யப்படாத பல சம்பவங்களும் உள்ளன.

மேற்படி அனைத்து சம்பவங்கள் தொடர்பிலும் நீதியைப் பெற்றுக்கொள்வதற்காகத் தேவையான முறைப்பாடுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. மேலே தரப்பட்டுள்ள பட்டியலில் பெரும்பாலானவர்கள் தமிழ் ஊடகவியலாளர்கள் என்பது போல் படுகொலை செய்யப்பட்ட 12 ஊடக சேவையாளர்களும் தமிழர்கள்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை மற்றும் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் சந்தேகநபர்கள் அடையாளம் காணப்பட்டிருந்தாலும், நடவடிக்கை கைவிடப்பட்டுள்ளது.

லசந்த கொலை சம்பந்தமாக 2010 பெப்ரவரி 26 ஆம் திகதி பொலிஸ் பயங்கரவாத விசாரணைப் பிரிவால் ஜேசுதாசன் என்பவர் கைது செய்யப்பட்டார். கைதான சந்தேகநபர் ஜேசுதாசன் சிறைச்சாலைக்குள்ளேயே திடீரென உயிரிழந்தார்.

லசந்தவின் மூத்த சகோதரரான லால் விக்கிரமதுங்க, "ஜெனரல் பொன்சேகாதான் லசந்தவை கொலை செய்தார்" என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தன்னிடம் மூன்று தடவைகள் தெரிவித்தார் எனக் குறிப்பிட்டிருந்தார். 2015 இல் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசு, லசந்த கொலை தொடர்பான விசாரணையை, பயங்கரவாத விசாரணைப் பிரிவிலிருந்து, குற்ற விசாரணை திணைக்களத்திடம் ஒப்படைத்தது. அந்த விசாரணையும் ஸதம்பிதமடைந்தது.

லசந்த விக்கிரமதுங்க கொலை தொடர்பில் 2016 ஜூலை 16ஆம் திகதி, இராணுவப் புலனாய்வுப் பிரிவு உறுப்பினர் ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டார் எனப் பொலிஸார் அறிவித்தனர். கைதுசெய்யப்பட்ட இராணுவப் புலனாய்வு உறுப்பினரை, லசந்த விக்கிரமதுங்கவின் சாரதி, நீதிமன்றில் இடம்பெற்ற அடையாள அணிவகுப்பின்போது அடையாளம் காட்டினார்.

உபாலி தென்னக்கோன் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பிலும் குறித்த இராணுவ புலனாய்வுப் பிரிவு உறுப்பினருக்கு குற்றச்சாட்டு உள்ளது எனப் பொலிஸார் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தினர். 2016 செப்டம்பர் 27 ஆம் திகதி மரண பரிசோதனைக்காக லசந்தவின் சடலம் தோண்டி எடுக்கப்பட்டது. அந்த விசாரணையும் ஸ்தம்பிதமடைந்தது.

ஹேக் நகரிலுள்ள மக்கள் நீதிமன்றத்தில் ஜனவரி 12 மற்றும் 13 ஆம் திகதிகளில் சாட்சி விசாரணை இடம்பெறவிருந்தது. எனினும், கொரோனாத் தொற்றால் அது ஏப்ரல் மாதம் வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நீதியை பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே லசந்த கொலை வழக்கு சர்வதேச நீதிமன்றம் கொண்டுசெல்லப்பட்டது.

லசந்த போலவே சிவராம் படுகொலை சம்பவம், எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை உட்பட மேற்படி கொலைகள் மற்றும் தாக்குதல்கள் தொடர்பில் முக்கியமான சாட்சியங்களை கண்டறிவதற்குப் பொலிஸாரால் முடியுமாக இருந்துள்ளது.

வடக்கில் காணாமல்போன சுப்பிரமணியம் இராமச்சந்திரன், இராணுவச் சோதனை சாவடியொன்றில் வைத்தே கைதுசெய்யப்பட்டுள்ளார். நண்பர் ஒருவருடன் செல்கையில்தான் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இறுதியாக இராணுவ முகாமில் இருந்தே வீட்டுக்கு அழைப்பையெடுத்து, விரைவில் வீடு திரும்ப முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். எனினும், அவர் மீள வரவே இல்லை.

ரூபவாஹினிக்குள் அத்துமீறி நுழைந்து ஊழியர்கள் மீது தாக்குதல் நடத்தியது அப்போது அமைச்சராக இருந்த மேர்வின் சில்வா.

இராணுவப் புலனாய்வுப் பிரிவுடன் தொடர்புகளைப் பேணி தவறான ஊடகச் செயற்பாடுகளில் ஈடுபட்டதாகப் பின்னர் தெரிய வந்த சம்பத் லக்மால் இறுதியாக வீட்டைவிட்டு வெளியேறும்போது அவர் எப்போதும் தொடர்பு வைத்திருந்த நண்பரான இராணுவப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரி ஒருவருடன் சென்றதாக அவரது தாயார் தெரிவித்திருந்தார்.

இந்த இராணுவ அதிகாரியின் பெயர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்தின் போதும் வெளிச்சத்துக்கு வந்தது. மந்தனா இஸ்மாயில் ஊடகவியலாளரது வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த ஆயுதம் தாங்கிய குழு தங்களது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளவோ அல்லது அவருக்கு அனர்த்தத்தை ஏற்படுத்தவோ முடியாமல் போய்விட்டது.

2000ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட நிமலராஜன் தொடர்பான வழக்கு நீண்டகாலமாக நிலுவையில் இருந்த நிலையில், சட்டமா அதிபரின் உத்தரவின் பிரகாரம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. சந்தேக நபர்கள் அறுவர் விடுதலை செய்யப்பட்டனர்.

அதேபோன்று தர்மரத்தினம் சிவராம் கொலை வழக்கும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. அது எப்படி எப்போது முடிவடையும் என்று தெரியவில்லை.

ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் நிரூபிக்கக்கூடிய சாட்சியங்கள் இருந்தும், குற்றவாளிகள் சுதந்திரமாக நடமாடுவதற்கு பாதுகாப்பு வழங்குவது யார்?

இலங்கையில் ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றச் செயல்களுக்கு தண்டனை வழங்கப்படாமல் இருப்பது தொடர்பில் உலகின் கவனத்தை ஈர்ப்பதற்கு பொது மக்களின் ஒத்துழைப்பும் அவசியம். அதற்கான தொடர் அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட வேண்டும்.



# ஆஸ்திரேலியாவில் தமிழ் அஞ்சல் தலை

● பொன்ராஜ் தங்கமணி

ஆஸ்திரேலியா முழுதும் கொரோனா கெடுபிடிகள் சற்றே தளர்ந்து இருந்த சூழலில், தமிழர்களின் விழாவான பொங்கல் விழா நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது. கொரோனா காரணமாக கடந்த இரண்டு வருடங்கள் எந்த நிகழ்வும் நடக்காத சூழ்நிலையில், தற்போது ஆரம்பித்த பொங்கல் நிகழ்வு ஒரு நல்ல துவக்கமாக இருக்கும் என பரவலாக நம்பப்படுகிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற பொன்மொழி படி நடக்குமா என அனைவரும் ஆவலுடன் உள்ளனர்.

இந்தப் பொங்கல் நிகழ்வின் போது நாடு முழுதும், தமிழ் சிறப்பு அஞ்சல் தலை வெளியிடப்பட்டது. இந்த அஞ்சல் தலையை ஆஸ்திரேலியாவில் உள்ள தமிழ் அமைப்புகள் பல ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்து வெளியிட்டன. இந்த அஞ்சல் தலையின் வடிவமைப்பை ஆஸ்திரேலியா தமிழ் கலை மற்றும் பண்பாட்டு வளர்ச்சி மையம் செய்து இருந்தது. இது விடயமாக அதன் ஒருங்கிணைப்பாளர் லோரன்ஸ் அண்ணாதுரையிடம் நடத்திய நேர்காணல் இதோ.

**கேள்வி - இந்த அஞ்சல் தலையை வெளியிடுவதன் நோக்கம் என்ன?**

பதில் - பல தேசிய மக்கள் வாழும் ஆஸ்திரேலிய பல்லின கலாச்சார சூழலில், தமிழ் மக்கள் தம்முடைய மரபுசார்ந்த தொன்மையான கலை பண்பாட்டுக் கூறுகளை எப்படி தங்களுடைய முதன்மை அடையாளமாக கொண்டு வாழ்கின்றார்கள் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

அடுத்த தலைமுறையினருக்கு அதை எப்படி பயிற்றுவிக்கிறார்கள் என்பதை எல்லாம் கருத்தில் கொண்டு எதிர்கால ஆஸ்திரேலிய பல்லின கலாச்சார சூழலில் தமிழ் கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகள் பகிரப்பட வேண்டும். அடுத்த தலைமுறையினர் தனித்துவமிக்க அடையாளத்துடன் வாழவும் இது போன்ற முன்னெடுப்புக்கள் அவசியம்.

இங்குள்ள தமிழ் அமைப்புகள் மட்டுமே தமிழ் சமூகத்தை நம்முடைய கலை மற்றும் பண்பாட்டுக் கூறுகளுடன் தாங்கிய சமூகமாக வாழ்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூழலில் அதை மேம்படுத்துவதும் அவர்களுக்கு உதவுவதும் மிக அவசியம்.

இதுபோன்ற செயல்கள், எதிர்காலத்தில் நாம் வாழக்கூடிய பகுதியில் உள்ள நகர சபையோ, மாநில அரசோ, மத்திய அரசோ நம்முடைய தமிழ் மரபுத் திங்கள் என்ற சொல்லாடலை ஒரு அதிகாரபூர்வ மிக்க அரசாணையாக வெளியிடுவதற்கான வாய்ப்புகளையும் இது எதிர்காலத்தில் ஏற்படுத்திக் கொடுக்கும்.

கனடா போன்ற நாடுகளில் தமிழ் மரபுத் திங்கள் அரசு அங்கீகாரம் பெற்ற ஒரு விழாவாக அறிவிக்கப்பட்டது போல் ஆஸ்திரேலியாவிலும் அறிவிக்க நாம் முயற்சிகள் எடுக்கும் போது இது உதவியாக இருக்கும் என நம்புகிறோம்.

இது தான் அஞ்சல் தலையை வெளியிட்டதன் நோக்கம்.

**கேள்வி - இந்த அஞ்சல் தலையை அரசு வெளியிட்டதாக சமூக வலைத்தளங்களில் செய்தி வெளியாகிறதே, அது சரியா?**

பதில் - அஞ்சல் தலையை அரசு வெளியிட்டதாக சமூக வலைத்தளங்களில் வெளியான செய்தி உண்மை அல்ல. அது சில நபர்கள் உணர்ச்சிவயப்பட்டு தவறான செய்தியை வெளியிட்ட தாகவே நான் கருதுகின்றேன். இத்தகைய செய்தியை நிச்சயமாக தமிழ் அமைப்புகளோ, அதை முன் எடுத்தவர்களோ அறிவிக்கவில்லை, பகிரவும் இல்லை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

ஆஸ்திரேலிய அஞ்சல் தலை என்ற சொல்லைக் கேட்டதும் ஏதோ அரசு இதை அதிகாரப்பூர்வமாக அறிவித்து வெளியிட்டதாக சில நண்பர்கள் அறியாமையின் காரணமாக உணர்ச்சிவயப்பட்டு அதை சமூக வலைதளங்களில் பகிர்ந்து இருக்கலாம் என அறிகிறோம். ஒரு செய்தியின் உண்மைத்தன்மை அறியாமல் பகிர்வது நமக்கு எந்த விதத்திலும் பயன் தராது.

**கேள்வி - இது ஆஸ்திரேலியாவில் உள்ள பல தமிழ்ச் சங்கங்கள் இணைந்து வெளியிடப்பட்டதாக சொல்கிறீர்கள், இது எவ்வாறு சாத்தியம் ஆனது?**

பதில்- ஆஸ்திரேலியாவில் உள்ள பல தமிழ்ச் சங்கங்கள் இணைந்து இந்த செயல் திட்டத்தை உருவாக்கியன.

இதனுடைய பின்னணியில் தெற்கு ஆஸ்திரேலியாவின் அடிலெய்ட் தமிழ்ச் சங்கத்தின் ஒருங்கிணைப்பில் உருவான தமிழ் அமைப்புகளின் கூட்டமைப்பு, இலங்கை தமிழ்ச் சங்கம், ஆஸ்திரேலிய தமிழ் கலைகள் மற்றும் பண்பாட்டு வளர்ச்சி மையம், சுருதி அடிலைட் , தெற்கு ஆஸ்திரேலிய தமிழ் பள்ளி, அடிலைட் தமிழ் பாடசாலை, மக்கள் நல காப்பகம் போன்ற அமைப்புகள் அனைத்தும் ஒன்றுகூடி ஒரு கூட்டமைப்பாக ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் விழாவை தமிழ்மரபு விழாவாக கொண்டாடி வரும் சூழலில் இந்த ஆண்டு அதை ஒரு அதிகாரபூர்வ செயலாக, ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் பயணத்தையும் தொடங்க வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டு இந்த அஞ்சல் தலையை வடிவமைக்கும் வேலை கடந்த ஜூன் மாதம் தொடங்கியது.

அதன்படி இந்த அஞ்சல் தலையானது வடிவமைக்கப்பட்டு அதில் தமிழர்களுடைய வாழ்வியல்,




கலை பண்பாட்டு கூறுகளை உள்ளடக்கிய ஒரு வடிவமைப்பை ஏற்படுத்தியது. அதை ஆஸ்திரேலிய அஞ்சல் துறைக்கு அனுப்பி அவர்கள் மேலதிகமாக கேட்ட மற்ற ஆவணங்களையும் சமர்ப்பித்து அனுமதி பெற்றது. இதை நாடு தழுவிய செயல்பாடாக மாற்ற சிட்னியில் உள்ள சிட்னி தமிழ் மன்றம், விக்டோரிய மாநிலத்தில் உள்ள தமிழர் திருவிழா ஒருங்கிணைப்புக் குழுவில் உள்ள 30-க்கும் அதிகமான தமிழ் அமைப்புக்கள், குயின்ஸ்லாந்து மாநிலத்தில் உள்ள குயின்ஸ்லாந்து தமிழ்மன்றம். மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள மேற்கு ஆஸ்திரேலிய தமிழ் சங்கம் உள்ளிட்ட அமைப்புகளுடன் சேர்ந்து அவர்களுடைய கருத்தையும் உள்வாங்கி இந்த அஞ்சல் தலையானது அச்சிடப்பட்டு நாடு முழுதும் அரசு பிரதிநிதிகளால் வெளியிடப்பட்டது.

**கேள்வி - இந்த அஞ்சல் தலையின் வடிவமைப்பை பற்றி கூறுங்களேன்...**

பதில் - இந்த அஞ்சல் தலையில் நான்கு முக்கிய கூறுகள் இடம் பெற்றுள்ளன. அது தமிழர்களின் கலை, வாழ்வியல், பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் தொன்மை ஆகும். சிவப்பு மற்றும் மஞ்சள் நிறமானது இயற்கையையும் மேலும் நம்முடைய தமிழ்நாட்டின் அரசு மாநில மலராகவும் உள்ள செங்காந்தள் மலரின் நிறத்தையும் குறிக்கிறது. இதில் கலைக் கூறுகளாக தமிழர்களுடைய தோல் இசைக் கருவிகளான பறை, முரசு, துடுப்பு, மிருதங்கம் போன்ற தோல் இசைக் கருவிகள், ஆட்டக் கலைகளாக பறையாட்டம், கரகாட்டம் சதிராட்டம் எனும் பரதநாட்டியம் ஒயிலாட்டம் போன்ற ஆட்ட கதைகள் இடம் பெற்றுள்ளன.

விளையாட்டுக்களை குறிக்கும் வகையில் தமிழர்களின் மரபு சார்ந்த விளையாட்டான கபடி விளையாட்டு இடம் பெற்றுள்ளது. பண்பாட்டுக் கூறுகளை குறிப்பிடுகையில் நம்முடைய பொங்கல்விழா அடையாளங்கள் அங்கு பொறிக்கப்பட்டுள்ளன. ஏறு தழுவுதல் எனும் மரபு சார்ந்த நம்முடைய இயற்கை சார்ந்த விளையாட்டும் அங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. வாழ்வியல் கூறுகளை அடிப்படையாக பார்க்கும்பொழுது குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை உள்ளிட்ட நிலப்பரப்பையும், விவசாயம் முதல் மீன்பிடி தொழில் வரை அனைத்தும் அங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ்ச் சமூகத்தின் முக்கிய அடையாளமாக பார்க்கப்படும் அய்யன் திருவள்ளுவரின் திருவுருவமும் ஓலைச்சுவடிகளும், கம்பீரமாக வீற்றிருக்கிறது. சேர சோழ பாண்டிய மன்னர்களின் அடையாளங்களான மீன் வில்லம்பு புலி ஆகிய சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

பின்னணியில் கீழடி அகழ்வாராய்ச்சியின் மூலம் கிடைக்கப்பெற்ற சில கல்வெட்டுக்கள் அகரம் எழுத்தும் பொறிக்கப்பட்டுள்ளது. தமிழர்களின் போர்க் கருவியான சிலம்பாட்டம், களரி அடி முறையும் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய பூர்வகுடி மக்களுக்கும் தமிழ்ச் சமூகத்திற்கும் உள்ள தொடர்பை உறுதி செய்யும் வகையில் நாம் பயன்படுத்தக்கூடிய போர்க் கருவியான வளரி காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. ஆஸ்திரேலிய பூர்வகுடி மக்களின் ஓவியங்களையும் அது தாங்கியிருக்கின்றது. மேலும் தமிழ்மரபு மாதம் என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது .

நடுவில் பனைமரம் என்று அழைக்கப்படும் கற்பகத்தரு நடுநாயகமாக வீற்றிருக்கிறது. தமிழர்களுடைய வரலாற்று பதிவுகளை பனை ஓலைச்சுவடிகள் தான் தாங்கி வந்து உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்படியாக தமிழர்களுடைய அனைத்து கூறுகளையும் கருத்தில் கொண்டு இந்த அஞ்சல்தலை அளந்து வடிவமைக்கப்பட்டுள்ளது. நிச்சயமாக எதிர்காலத்தில் இது மிகப் பெரிய விழிப்புணர்வை ஆஸ்திரேலிய தமிழ் சமூகத்திலும் பல்லின சமூகத்திலும் ஏற்படுத்தும் என நம்புகிறோம்.

**கேள்வி - இந்த அஞ்சல் தலையை எவ்வாறு வாங்குவது, இதை மற்ற அஞ்சல் தலை போல அஞ்சல் அனுப்ப பயன்படுத்த முடியுமா?**

பதில் - இந்த அஞ்சல் தலையை மற்ற அஞ்சல் தலை போல் பயன்படுத்த முடியும். இது அஞ்சல்துறையின் அனுமதியோடு அவர்களே நமக்கு அச்சிட்டுக் கொடுத்த அஞ்சல்தலை என்பது குறிப்பிடத்தக்கது.

**கேள்வி - இதை அருகாமையில் உள்ள அஞ்சல் அலுவலகத்தில் வாங்க முடியுமா அல்லது இந்த அஞ்சல் தலையை எங்கே எப்படி வாங்குவது?**

பதில் - இதை அஞ்சல் அலுவலகங்களில் நேரடியாக வாங்க இயலாது. மாறாக தமிழ் அமைப்புக்கள் ஊடாகவே இதை பெற்றுக்கொள்ள முடியும். முக்கியமாக அடிலெய்டு நகரில் உள்ள அடிலைடு தமிழ்ச் சங்கம், மெல்பேனில் உள்ள கேசி தமிழ் மன்றம் உள்ளிட்ட பல தமிழ் அமைப்புகள், சிட்னியில் உள்ள சிட்னி தமிழ் மன்றம், பிரிஸ்பனில் உள்ள குயின்ஸ்லாந்து தமிழ் மன்றம், மேற்கு ஆஸ்திரேலிய தமிழ்ச்சங்கம் எனப் பல தமிழ் அமைப்புக்கள் ஊடாக இந்த அஞ்சல் தலையை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

இதை ஒரு அன்பளிப்பாகவும், நினைவுப் பரிசாகவோ அல்லது தொடர்ந்து பயன்படுத்தும் அஞ்சல் தலையாகவோ வணிக நிறுவனங்கள் பயன்படுத்தலாம். தேவைக்கு ஏற்ப உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அஞ்சல் தலையும் நம்மால் பெற்றுற்றுக்கொள்ள முடியும்.

**கேள்வி - இதை ஊக்கப்படுத்த தமிழ் மக்கள் என்ன செய்ய வேண்டும்?**

பதில் - தமிழ் மக்கள் இந்த அஞ்சல் தலை வெளியீட்டின் நோக்கத்தை உள்வாங்கி, இந்த அஞ்சல் தலையில் உள்ள கூறுகளை ஆய்வுக்கு உட்படுத்தி தங்கள் வீடுகளில் தங்கள் குழந்தைகளுடனும் நண்பர்களுடனும் அதைப்பற்றி பேச வேண்டும்.

இந்த அஞ்சல் தலையை வாங்கி நம்முடைய நண்பர்களுக்கும் பள்ளிகளுக்கும் அன்பளிப்பாக பகிர வேண்டும்.

சிறிய மற்றும் பெரிய வணிகங்கள் நடத்தக்கூடிய தமிழர்கள், இந்த அஞ்சல் தலையை இந்த ஆண்டு முழுவதும் பயன்படுத்துவதற்கு உறுதியேற்க வேண்டும். இதனூடாக இந்த விழிப்புணர்வு நோக்கமானது வெற்றியடையும். நம்முடைய பிள்ளைகள் நிச்சயமாக இந்த அஞ்சல் தலையில் உள்ள தமிழ் மரபுக் கூறுகளை பார்த்து ஆஸ்திரேலிய தமிழர்களாக பெருமிதம் கொள்வார்கள் என நம்புகிறோம். ■

# Sai Shree Foods
Pty. Ltd.

## AUSTRALIA - CANADA - INDIA

# REMARKABLE QUALITY AND RELISHING TASTE.




If you're after the authentic taste of Indian style foods look no further, Sai Shree Foods is the manufacturer of quality Indian Yoghurt, Idli & Dosa mix, Paneer, Shrikhand Kesar Elaichi, Mango Lassi, Punjabi Lassi and much much more. Sai Shree Foods produce a Quality Australian Products in Melbourne facility.

We are also distributing Grand snacks/pickles and Mambalam Iyers pickles (Famous South Indian brand)

**HEAD OFFICE:** Sai Shree Foods Pty. Ltd.
Ph: 03 9706 6211
Unit 17/69-77, Mark Anthony Drive, Dandenong - VIC 3175

**DISTRIBUTORS:** Sai Shree International Pty Ltd
Sydney & Canberra - Mr Bhaskar - 0421 835 554
Products Available - Adelaide, Perth, Brisbane & Darwin

எதிரொலி
ஆஸ்திரேலியா ETHIROLI




# இந்திய ஆதிக்கத்துக்கான குறுக்குத் தடியா மீனவர் போராட்டம்

● ஜெரா

நாங்கள் செருப்போட கடலில் இறங்கமாட்டம்" என முல்லைத்தீவில் கரையோர மக்கள் சொல்வார்கள். ஏனெனில் கடல் அந்த மக்களின் வணக்கத்திற்குரிய தெய்வம். சங்கு, அட்டை, கடற்பாசி, கடல்வாழ் தாவரங்கள் என மீன் உற்பத்தியைப் பெருக்கும் எவ்வகை கடல்வாழ் உயிரினங்களையம் வடக்கு, கிழக்கு மீனவர்கள் கரைக்கு எடுத்துவருவதில்லை. தப்பித்தவறி வலையில் சிக்கும் இவ்வகை உயிரினங்களை உடனடியாகவே கடலில் விடும் மரபை இன்றும் அவதானிக்கலாம். இந்த நடைமுறை சந்ததிசந்ததியாக ஏன் பின்பற்றப்படுகிறதெனில், கடல் வளம் எதிர்கால சந்ததிக்கும் உரியது என்கிற உயரிய சிந்தனையின் வெளிப்பாடாகாத்தான்.

2009 ஆம் ஆண்டில் போர் நிறைவுறும் வரையில் வடக்கு, கிழக்கு மீனவர்களுக்குத் தொழில்சார்ந்த பிரச்சினை ஒன்றேயொன்றுதான் இருந்தது. கடற்படையின் தாக்கு தலை - தடைகளைத் தாண்டி பெரியளவுப் பிரச்சினைகள் இருக்கவில்லை. விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் கடலுக்கு வேலியிட்டுக் காத்தனர். மீனவர்கள் தம் கடலின் எல்லைவரை சென்று மீன்பிடித்து வந்தனர். பட்டதுயர் முடிந்தது படகெடு கடற்புலி நிற்கு கடல்மேலே பயம்விடு என்ற பாடல் வரிகளை பொற்காலக் கீதமாகவே கரையோர மீனவர்கள் பாடித்திரிந்தனர். கடற்புலிகள் தமிழ் மீனவர்களுக்கு மாத்திரமின்றி, சிங்கள மீனவர்களுக்கும் இருந்த கடல்சார் ஆபத்துக்களைத் தடுத்துவந்தனர்.

போர் முடிவுற்றவுடனேயே இலங்கையின் தெற்கு மீனவர்கள், இந்திய மீனவர்கள், பலம்பொருந்திய நாடுகளது கடல்சார் தொழிலில் ஈடுபடும் நிறுவனங்கள் என அனைவரும் வளமிகு வடக்கு, கிழக்கு கடற்பிராந்தியங்களில் கண்வைத்தனர். ஆனால் தெற்கு மீனவர்களின் வடக்கு, கிழக்கு நோக்கிய வருகையே அதிக பாதிப்பை ஏற்படுத்தியது. மாத்தறை, காலி, நீர்கொழும்பு பகுதிகளில் இருந்து ஆயிரக்கணக்கான மீனவர்கள் வடக்கிற்கு வந்து தடைசெய்யப்பட்ட அத்தனை மீன்பிடி முறைமைகளையம் பயன்படுத்தி கட்டிக்காத்துவைத்திருந்த கடல்வளங்களைச் சூறையாடி செல்கின்றனர்.

இரவு - பகல் முழுநேரமும் இயந்திர ஒலிகளைப் பாய்ச்சி ஆழ்கடல் அட்டை பிடித்தலில் ஈடுபடுகின்றனர். இந்த சட்டவிரோத கடல்றொழில் நடவடிக்கைகளை தடைசெய்யுமாறு கோரி வட மாகாண மீனவர்கள் எதிர்ப்பு வெளியிட்டும், போராட்டம் நடத்தியும் எவ்விதப் பயனும் கிடைக்கவில்லை. தீர்வுகாணப்படாத பிரச்சினையாக இன்னமும் தொடர்கிறது.

இந்நிலையிலேயே இந்திய மீனவர்களது வடமாகாண கடல்நோக்கிய ஆக்கிரமிப்பும் பேரிடியாக இறங்கியிருக்கிறது. போர் முடிவடைந்த காலப் பகுதியிலிருந்தே இப்பிரச்சினை இருந்து வந்தாலும் காலத்துக்குக் காலம் எல்லைதாண்டும் இந்திய மீனவர்களின் எண்ணிக்கையும், எல்லை விஸ்தரிப்பும் அதிகரித்தே செல்கின்றது. இவ்வாறு எல்லைதாண்டும் இந்திய மீனவர்கள் அன்றாடங்காய்ச்சிகளோ சிறுதொழில் உரிமையாளர்களோ அல்ல. ஆழ்கடல் மீன்பிடியை பாரிய தொழிற்துறையாக வைத்து இலாபமீட்டும் மீன்பிடி மாபியாக்களின் அன்றாட கூலியாட்கள்தான் எல்லைத்தாண்டுகின்றனர். பெரும் வணிக முதலாளிகள், அரசியல்வாதிகள், பல்தேசிய கம்பெனிகள்தான் பருத்தித்துறை முனைவரை வந்து மீன்களைச் சூறையாடும் மீன்கொள்ளையர்களின் எஜமானர்கள். நாளொன்றுக்கு இத்தனை ஆயிரம் கிலோ என இலக்குவைக்கப்படும் மீனுக்காக கடலில் எதையும் செய்யும் துணிவோடு அவர்கள் களமிறங்குகின்றனர்.

இந்த மனநிலைதான் உலகில் தடைசெய்யப்பட்ட அத்தனைவகை மீன்பிடி முறைகளையும் இந்துமாகடலில் பயன்படுத்தி மீன் அள்ளத் துணிகிறது. தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தித் தமிழகத்தின் கடலை வெறுமையாக்கிவிட்டனர். கடலின் அடி நிலம் வரை படுக்கவிடப்படும் தங்கூசி போன்ற வலைகள் அடியாழத்தின் பாசிகள், தாவரங்கள், அரிய உயிரினங்கள், மீன் இனவிருத்திக்கு உதவும் கூடுகள் என அனைத்தையும் மேலே இழுத்துவந்துவிடுகின்றன. இதனால் கடலின் உயிர்ப்பல்வகைமை சீர்குலைவதுடன் மீன்கள் அழியவும் இனவிருத்தி அழிந்துபோகவும், பாரிய மீன்கள் இடம்பெயரவும் வாய்ப்பு ஏற்படுகிறது. தமிழக கடல் வெறுமையானமைக்கு இதுவே காரணம். எனவேதான் தமிழக கடல்வளங்களைச் சூறையாடி ஏப்பமிட்ட பின்னர் இலங்கையின் வளமிகு கடல்வளங்களைச் சூறையாடத் தொடங்கியிருக்கின்றனர்.

இந்திய மீனவர்கள் ரோலர்கள் எனப்படும் பாரிய மீன்பிடிப் படகுகளையே பயன்படுத்துகின்றனர். தடைசெய்யப்பட்ட வலைகளையும், கடலுக்கு ஒளிபாய்ச்சி மீன்களை ஓரிடத்துக்குக் குவியச்செய்து மீன்களை அள்ளும் முறைகளையும், மீன்களை குவியச்செய்து டைனமிற் போன்ற நச்சுக் குண்டுகளை வீசி மீன்களை மயக்கமுறச்செய்து அள்ளும் முறைகளையும் பயன்படுத்துகின்றனர். இவ்வாறான மீன்பிடியின்போது சிறுபடகுகளில் செல்லும் வட இலங்கை மீனவர்கள் குறித்து இந்திய மீனவர்கள் கவனமெடுப்பதில்லை. படகுகளை இடித்து சிதைப்பது, வட இலங்கை மீனவர்களின் வலைகளை அறுப்பது, வலைகளில் சிக்கிய மீன்களை அள்ளிச்செல்வது எனப் பல்வேறு நாசாகார வேலைகளை கடலில் செய்கின்றனர். இதனால் பல கோடி ரூபாய் நட்டத்தை மரமேறி விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாக வட இலங்கை மீனவர்கள் எதிர்கொள்கின்றனர்.

இந்த விடயம் குறித்து வடமாகாண மீனவர்கள் ஏற்கனவே பெரும் கவனயீர்ப்புப் போராட்டங்களை நடத்தியிருக்கின்றனர். இந்திய துணைத்தூதரகத்திற்குப் பலமுறை அறிக்கைகளைக் கொடுத்திருக்கின்றனர். இலங்கை கடற்றொழில்துறை அமைச்சர்கள் அனைவருக்குமே சலிப்பு ஏற்படும் வரையில் தமது நிலையை விளங்கப்படுத்திவிட்டனர். ஆனால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. கடலில் இந்திய மீனவர்களின் அட்டகாசங்கள் அதிகரிக்கும்போது சிலரை கடற்படையினர் கைதுசெய்வர். பின்னர் இந்திய உயர்மட்ட அழுத்தங்களின் காரணமாக அனைவருமே விடுவிக்கப்படுவர். பாதிக்கப்பட்ட வட இலங்கை மீனவர்களுக்கு இதுவரை எவ்வித நட்ட ஈடுகளும் வழங்கப்படவில்லை.

கோட்டபாய ராஜபக்ச ஆட்சி பீடமேறிய காலத்தில் இந்திய மீனவர்கள் இலங்கையின் கடல் எல்லையைத் தாண்டி சில கடல் மைல்தொலைவிற்குள்ளேயே நின்றனர். தற்போது வடமாகாண கடற்கரையின் எப்பகுதியில் நின்று பார்த்தாலும் தெளிவாகத் தெரியுமளவுக்கு கரைக்கு வந்து மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இந்த அத்துமீறலை இலங்கை கடற்படையினாலும் கட்டுப்படுத்த முடிவதில்லை. தவறான பொருளாதார நடவடிக்கைகளால் மீளமுடியாத கடன்பொறிக்குள் சிக்கிக்கொண்ட இலங்கை இந்தியாவிடமும் நக்குண்டார் நாவிழந்தார் உறவையே தொடர்கின்றது. எனவே மீனவர் பிரச்சினையைக்கூட சரியாகக் கையாளத்தெரியாத நிலைமையிலேயே அரசு இருக்கின்றது.

எனவேதான் இதற்கு ஒரு தீர்வு வேண்டும் என்ற நோக்கோடு வடமாகாண மீனவர்கள் களத்தில் குதித்திருக்கின்றனர். வடமராட்சி கிழக்கு, வத்திராயன் கிராமத்தைச் சேர்ந்த இரண்டு மீனவர்கள் கடலுக்கு சென்ற நிலையில் காணாமல் போயிருந்தனர். அதன் பின்னர் சிலநாட்களில் சடலமாக இருவரும் மீட்கப்பட்டனர். இவர்களது கொலைக்கு இந்திய மீனவர்களே காரணம் எனத் தெரிவித்து வடமாகாண மீனவர்கள் தெருவில் குதித்திருக்கின்றனர். போராட்டக் களங்களுக்கு வலிந்து செல்லும் கடற்றொழில் அமைச்சரிடம் தீர்வுகளோ, உறுதிமொழியோ இல்லை. மீனவர்களுடன் முரண்படுகின்றார். போராடும் மீனவர்களை அச்சுறுத்துகின்றார்.

சில காலங்களுக்கு முன்பு எல்லை தாண்டிய இந்திய மீனவர்கள் 7 பேரை இலங்கை கடற்படை சுட்டுக்கொன்றது. அதனைப் போன்றதொரு நடவடிக்கை தேவையா என மீனவர்களிடம் கடற்றொழில் அமைச்சர் கருத்துக்கணிப்பு செய்கிறார். ஆனால் மீனவர்கள் யாரையும் கொலைசெய்யக் கேட்கவில்லை. இறைமையுள்ள அரசுகள் சம்பந்தப்படும் இவ்விடயத்தை அரசுகளும், கடற்படையும் தலையிட்டு சட்டரீதியான பாதுகாப்பையே கோருகின்றனர். கடல் இறைமையுடைய அரசொன்று தன் கடலைப் பாதுகாக்கவேண்டும் என்பதையே வலியுறுத்துகின்றனர். ஆனால் அரசோ தமிழக - இந்திய - ஈழ தமிழர்களை கொலைசெய்யவும், மோதவிடவும் கூடிய சந்தர்ப்பங்களை உருவாக்கவே முயல்கிறது. வட மாகாணத்தை நோக்கி அதிகரித்துவரும் இந்திய செல்வாக்கானது இலங்கையைத் தன் கட்டுக்குள் கொண்டுவரப் போட்டியிடும் அனைத்துத் தரப்பிற்கும் பிரச்சினைக்குரியதொன்றாகும். அண்மையில் வட மாகாணத்தின் யாழ்ப்பாணத்திற்குப் பயணம் மேற்கொண்ட சீனத் தூதரும் பருத்தித்துறை முனைக்கே சென்றிருந்தார். அவ்விடத்திலிருந்து இந்தியா எவ்வளவு தூரம் என வினவியதோடு, மீனவர்களுக்கு நிவாரணங்களையும் வழங்கியிருந்தார்.

யாழ்ப்பாணம் என்பது இன்னொரு நாட்டின் மாகாணமல்ல. அது இலங்கையின் ஒரு மாவட்டம் எனப் பயணத்தின் பின்னர் கூறியிருந்தார். ஆனால் கொழும்பு மாவட்டத்தில் வரும் கொழும்பு துறைமுக நகர் சீன மாநிலமாகவே மாறிவருவதை அவர் எவ்விடத்திலும் வெளிப்படுத்தவில்லை. எனவே யாழ்ப்பாணம் உள்ளிட்ட வடமாகாணம் இந்தியாவின் கட்டுப்பாட்டின் கீழ் செல்வதுதான் இங்கே பிரச்சினை. இந்த இந்திய செல்வாக்கிற்கு குறுக்குதடி போடவே மீனவர் பிரச்சினை கையிலெடுக்கப்பட்டிருக்கிறது என்கிற சந்தேகம் வலுக்கிறது.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# ஆப்கானிஸ்தானை கைவிட்டுவந்த அமெரிக்கா உக்ரைனுக்காக குத்தி முறிவதேன்?



● குமாரதாஸன், பாரிஸ்

உக்ரைனைப் பாதுகாப்பதற்காக நேட்டோ நாடுகளைத் துணைக்கு அழைத்துக் கொண்டு பெரும் போர் ஆயத்தங்களில் முழு மும்முரமாக இறங்கியிருக்கிறது அமெரிக்கா. கிழக்கு ஐரோப் பிய நாடுகளுக்கு அனுப்புவதற்காக சுமார் எட்டாயிரம் துருப்பினரைத் தயார் நிலையில் வைத்திருப்பதாக அது அறிவித்திருக்கிறது. அவர்களில் சிறு தொகையினரை விரைவில் அங்கு அனுப்ப உள்ளதாக பைடன் கூறியிருக்கிறார்.

மறுபக்கத்தில் ரஷ்யா உக்ரைனுக்குள் ஓர் அடி எடுத்து வைத்தாலும் உடனடியாக அதன் மீது விதிக்கப்படுவதற்குத் தயாராக நீண்ட தடைப் பட்டியலையும் அமெரிக்கா தயார் செய்துள்ளது. ரஷ்யா மீது இதுவரை விதிக்கப் பட்ட தடைகள் எல்லாவற்றையும் விடப் பாரதூர மானவை எனக் கூறப்படுகின்ற அவற்றுக்குத் "தடைகள் அனைத்தினதும் தாய்" (mother of all sanctions') என்று பெயரிட்டுள்ளது.

மொஸ்கோ-பாரிஸ்-நியுயோர்க்-பேர்ளின் என்று பல இடங்களிலும் பேச்சுக்களும் ராஜதந்திர முயற்சிகளும் ஒருபுறம் நடந்தாலும் போர் வெடிக்கப் போவது நிச்சயம் என்பது போன்ற உறுதியுடன்- அதனை எதிர்கொள்வதற்கான முழு ஏற்பாடுகளில் அமெரிக்கா தொடர்ந்து முனைப்புக்காட்டி வருவது தெரிகிறது.

"சும்மா பதற்றத்தை உருவாக்காதீர்கள்" என்று உக்ரைன் நாட்டுத் தலைவரே கூறும் அளவுக்கு அமெரிக்காவும் இங்கிலாந்து போன்ற அதன் நேச அணிகளும் "இந்தா அந்தா" என்று குத்தி முறிவது ஏன் என்ற கேள்விகள் எழுகின்றன.

இங்கிலாந்துப் பிரதமர் பொறிஸ் ஜோன்சன் உள் நாட்டில் லொக்டவுண் மது விருந்துகள் விவகாரத்தில் தனது பதவி ஊசலாடும் நிலையில் அதிலிருந்து கவனத்தைத் திருப்புவதற்காக உக்ரைனுக்குப் பறந்திருக்கிறார். அமெரிக்காவின் வரலாற்றில் வியட்நாம் ஈராக்.... என்று இதற்கு முன்னர் நிகழ்ந்த பல பின்னடைவுகள் பற்றி உலகம் விவா திப்பதற்குக் காபூல் குழப்பம் வாய்பளித் திருந்தது.

அமெரிக்காவின் சர்வதேசச் செல்வாக்கும் அதன் உலக ஒழுங்கும் ஆட்டங் காண்பது போன்ற தோற்றங்களையும் அது ஏற்படுத்தியது. பெரும் அல்லோலகல்லோலங்களுக்கு மத்தியில் ஆப்கானிஸ்தானைத் தலிபான்களிடம் கையளித்துவிட்டு ஆரவாரமாகத் தனது படைகளைத் திருப்பி அழைத்துக்கொண் டது அமெரிக்கா. இனிமேல் அது போன்ற இராணுவத் தலையீட்டை இப்போதைக்கு அது நினைத்துப் பார்க்காது என்றவாறு காபூல் அத்தியாயம் நிறைவு பெற்றிருந்த நிலையில் அடுத்த ஒரு சில மாதங்களுக் குள்ளாகவே மற்றொரு பெரும் இராணு வத் தலையீட்டுக்கான-தயார்ப்படுத்தல்களில் வாஷிங்டன் முழுமூச்சாக இறங்கி யிருக்கிறது.

நேட்டோ உடன்படிக்கையில் (The North Atlantic Treaty Organization) மிக முக்கிய மான சரத்து "உறுப்பு நாடுகளில் ஒன்றை மற்றைய அனைத்தும் சேர்ந்து பாதுகாத் தல்" என்பது ஆகும். "எல்லோரும் ஒருவரு க்காக,ஒருவர் எல்லோருக்காகவும்" (All for one, one for all'') என்பது அதன் பிரபலமான வாசகம். உறுப்பு நாடு ஒன்றுக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டால் ஏனையவை அதனைப் பாதுகாப்பது என்பது உக்ரை னைப்பொறுத்தவரை முழு அளவில் பொருந்தாது. ஏனெனில் அது நேட்டோ சார்பு நாடு என்றாலும் கூட இன்னும் முறைப்படி அந்த அணியில் இணைந்து கொள்ளவில்லை. அப்படியிருக்க அமெரி க்கா அதனைப் பாதுகாப்பதில் வரம்பு மீறித் தீவிரம் காட்டுகிறது. அதற்கு என்ன காரணம்? சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு-பனிப்போர் முடிவுக்கு வந்ததன் பிற்பாடு - மேற்கு நாடுகளுக்கு எதிராக ரஷ்யா செய்கின்ற ஒரு பெருமெடுப்பி லான படைக்குவிப்பு இது. மொஸ்கோ கூறுவதுபோன்று அது ஒரு வழமையான ஒத்திகை என்பதை போரியல் வல்லுநர் கள் எவரும் நம்பத் தயாரில்லை.

அமெரிக்காவின் அதிபராக பைடன் பதவிக்குவந்த பிறகு எதிர்கொள்கின்ற முதலாவது பெரும் நெருக்கடி என்ற வகையில் அதனை அவர் எவ்வாறு கையாள்கிறார் என்பதை நிரூபிக்கப் போகின்ற முதலாவது பரீட்சைக் களம் உக்ரைன். அவரது ஒருவருட ஆட்சிக்காலம் வாக்காளர்களைத் திருப்திப்படுத்தத் தவறிவிட்டது. எனவே சர்வதேச மேடை யில் தன் விம்பத்தைப் பெருப்பிப்பதற்கு அவர் முயற்சிக்கிறார். அமெரிக்க வல்லரசு ஆப்கானிஸ்தான் பின்னடைவுக்குப் பிறகு, உள்நாட்டில் பெரும் தொற்றுநோய் மற்றும் பொருளா தார மந்த நிலைகளுக்கு மத்தியில் - அதன் வெளிச் செல்வாக்கையும் தலை மைத்துவ நம்பிக்கையையும் முழு உலகு க்கும் நிரூபித்துக் காட்டவேண்டிய ஓர் அவசியம் எழுந்துள்ளது. அதற்கான வாய்ப்பாகக் கிடைத்திருக்கின்ற களமும் உக்ரைன்.

ரஷ்யா-உக்ரைன் போர்க் களத்துக்கு இவ்வாறு பல முக்கியத்துவங்கள் இருக் கின்றன. அதைவிட மிகக் கூர்ந்து கவனிக்கப்படுகின்ற வேறொரு விடயம் தைவான் - சீனா விவகாரத்தில் உக்ரைன் ஏற்படுத்தப் போகின்ற தாக்கம் என்ன என்ற கேள்வி. மொஸ்கோ தனது ஆதிக்கச் சுற்றுப் பாதையில் இருந்து உக்ரைனை தவறவிட்டதை ஒத்த நிலைமையில்தான் சீனா தைவானில் தனது கட்டுப் பாட்டை இழந்து நிற்கிறது. உக்ரைனைக் கைப் பற்றுவதற்கான மொஸ்கோவின் நகர்வுகளையும் அதை அமெரிக்கா முகம் கொள்கின்ற விதங்களையும் மிக உன்னிப்பாகக் கவ னித்துவருகின்றார் சீன அதிபர்.

தைவான் தொடர்பான தனது எதிர்கால உத்தி களை வகுப்பதற்கான பாடங்களை அதிலிருந்து கற்றுக்கொள்வதற்கு அவர் எதிர்பார்த்துள்ளார். உக்ரைனில் அமெரிக்காவுக்கும் அதன் நேட்டோ நேச அணிக்கும் இராணுவ மற்றும் ராஜதந்திர ரீதியில் ஏற்படக் கூடிய சறுக்கல்கள் தைவானை ஆக்கிர மிக்க நினைக்கின்ற சீனாவின் திட்டங் களுக்குப் பலம் சேர்க்கும் என்பது நிச்சயம். எனவே உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவின் கை ஓங்குவதை அமெரிக்கா அனுமதிக்குமானால் அதற்கு அடுத்த ஒரு பின்னடைவு தைவானில் காத்திருக்கலாம். இன்றுவரையான உலக ஒழுங்கு என்பது இதுவரை மேற்கின் வசமாகவே இருந்து வந்திருக்கிறது.

ஜனநாயகத்தையும் மனித உரிமைகளையும் பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு அமெரிக்காவும் அதன் நேச அணிகளும் , தாங்கள் விரும்பிய எதனையும் உல-கின் எந்தப்பகுதியிலும் எப்போதும் செய்துவிட முடியும் என்பதே அந்த ஒழுங்கின் எழுதாத விதி. ஆனால் அண்மைய காலங்களில் சீனாவின் வர்த்தக பொருளாதார விரிவாக்கங்கள் உலக ஒழுங்கில் தளம்பல்களை ஏற்படுத்துவதை அவ தானிக்க முடிகிறது.

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் நேட்டோ வின் விரிவாக்கத்துக்கு மறுவளமாகப் பழைய சோவியத் நாடு-களை இணைத்து ஒரு புதிய "ரஷ்ய நாகரீகத்தை" உருவாக்கி அந்த ராஜ்ஜியத்தின் பேரரசனாக மாறுவ தற்குக் கனவு காண்கிறார்.

சீனப் பெரு நிலப் பரப்பிலிருந்து ஒரு நீரிணையால் (Taiwan Strait) பிரிந்திருந்த காரணத்தால் வழிதவறிப்போன தைவானை மீண்டும் வழிக்குக் கொண்டுவந்து தனது அதிகார வரம்புக்குள் இணைத்து சீனப் பேரரசை உலக வல்லாதிக்க சக்தியாக மாற்றுவது அதிபர் Xi Jinping அவர்களது இலக்கு. இருவரது கனவுகளுக்கும் பொது எதிரி அமெரிக்காவும் அதன் மேற்குலகக் கூட்டணியும் தான். மேற்குலகின் பொது எதிரிகளான ரஷ்யாவும் சீனாவும் அடிப் படையில் தங்களுக்குள் ஓர் கோட்பாட்டு இணக்கத்தைக் கொண்டிராவிடினும் மேற்கை எதிர்ப்பது என்ற கொள்கையில் இரண்டும் மிக நெருக்கமாகவே உள்ளன. அந்த வகையில் ரஷ்யாவின் மேற்கு நோக்கிய விரிவாக்கத்தின் தொடக்கப் புள்ளி உக்ரைன்.அதில் புடின் வெற்றியீட் டுவாரேயானால் தைவான் மீது தனது படையெடுப்பு முஸ்தீபு எண்ணத்தை சீனா பரீட்சித்துப்பார்க்கக் கூடும். அது சீனாவும் ரஷ்யாவும் இணைந்து ஒரு புதிய உலக ஒழுங்கைக் கட்டுவதற்கான அடிக்கல்லாக அமைந்துவிடும் என்று மேற்கைப் பாதுகாக்கின்ற கொள்கையு டையோர் அஞ்சுகின்றனர். தற்போதைய உக்ரைன் நெருக்கடி தொடர்பாக மேற்குலகில் கிளம்பியுள்ள மிகையான அச்சம் இதனையே பிரதி பலிக்கிறது.

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



# தேர்தல் அரசியல் போட்டிக்குள் தடுமாறும் 13ஆவது திருத்தம்


**எதிரொலிக்கு முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் வழங்கிய விசேட பேட்டி**

**1987** இல் இலங்கை - இந்திய உடன்படிக்கையின் மூலம் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக மாகாணசபை முறைமையை உருவாக்கியது இந்தியா. 35 ஆண்டுகள் கடந்த பின்னும் மாகாணசபை முறைமை வெற்றியளிக்காத ஒன்றாகவே உள்ளது. மாகாணசபைகளுக்கான சட்டமூலமான 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை அரசு தொடர்ந்து பின்னடிக்கிறது. மாகாணசபை முறைமையும் 13 ஆவது திருத்தமும் தமிழர்களுடைய அரசியல் அபிலாஷைகளுக்குத் தீர்வைத் தராது என்கின்றது தமிழர்களின் ஒரு தரப்பு. இந்தியாவின் பங்களிப்பு தொடர வேண்டும். 13 ஐ நடைமுறைப்படுத்துவதில் இந்தியா அக்கறை காட்ட வேண்டும் என்கின்றது இன்னொரு தமிழ்த் தரப்பு. இதனால் இந்த விவகாரம் மீண்டும் விவாதப்பொருளாகியிருக்கிறது. இந்தச் சூழலில் இணைந்த கிழக்கு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருடன் இந்தச் சூழலமைவு பற்றி பேசியுள்ளோம்.

(யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்துப் பட்டம் பெற்ற வரதாரஜப்பெருமாள், அங்கே, பொருளியல் விரிவுரையாளராகப் பணியாற்றியவர். பின் அரசியற் போராட்டங்களில் பங்கு பற்றியதன் காரணமாக சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அரசினால் கைது செய்யப்பட்டு சிறைகளில் அடைக்கப்பட்டார்.

1983 செப்டம்பரில் மட்டக்களப்பு சிறை போராளிகளால் தாக்கப்பட்ட போது, வரதராஜப் பெருமாள் சிறையில் இருந்து இந்தியாவிற்குத் தப்பிச் சென்றார். விடுதலைப் போராளி அமைப்புகள் 1985 ஆம் ஆண்டில் இலங்கை அரசுடன் நடத்திய திம்புப் பேச்சுவார்த்தைகளில் பெருமாளும் கலந்து கொண்டார்.

1987 ஆம் ஆண்டில் இந்திய இலங்கை உடன்பாட்டை அடுத்து வடகிழக்கு மாகாண சபையின் முதலமைச்சர் பதவியை வரதராஜப் பெருமாள் ஏற்றுக் கொண்டார். டிசம்பர் 1988 முதல் மார்ச் 1990 வரை இப்பதவியை வகித்து வந்தார்).



இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியுடன்...



தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவுடன்...

**கேள்வி:- தமிழரின் அரசியலில் 13ஐப் பற்றிய பேச்சுக்கள் இப்போது தீவிரமாகியுள்ளன. இதனுடைய இன்றைய நிலை மற்றும் எதிர் காலச் சாத்தியங்கள் குறித்து உங்களுடைய அபிப்பிராயம் என்ன?**

பதில்:- பெரும்பான்மையான தமிழ் மக்களின் வாக்குளைப் பெறுகின்ற பிரதிநிதிகள் அவ்வப்போது இந்திய அரசின் அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளைச் சந்திக்கிற போது இலங்கையின் அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தின்படி மாகாண ஆட்சி முறைமைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரப்பகிர்வு விடயத்தை பத்தோடு பதினொன்றாக, அதுவும் ரகசியமாகவே கோரி வந்தார்கள். ஆனால், கடந்த முறை இந்திய வெளியுறவுச் செயலாளர் இலங்கை வந்தபோது நடைபெற்ற சந்திப்பின் போதும் அவ்வாறாகவே ரகசிய உரையாடல் நடந்திருக்கின்றது. அவ்வேளையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் 13வது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்றும்படி இந்திய அரசுதான் தொடர்ந்து வெளிப்படையாகக் கோரி வருகின்றது. தமிழர்களின் பிரதானமான கட்சிகள் அது பற்றி வெளிப்படையாகப் பேசுவதுமில்லை - முறையாகக் கோருவதுமில்லை என்று குற்றம் சாட்டிய பின்னரே தமிழர்கள் மத்தியிலுள்ள கட்சிகள் பல அது தொடர்பாக குரலெழுப்பவும் கடிதங்கள் எழுதவும் தொடங்கியிருக்கின்றன. 13வது திருத்தம் தொடர்பாக தமிழர்கள் மத்தியில் உள்ள பிரதானமான கட்சிகள் உறுதியான அக்கறை காட்டவில்லையென்றால் மிக விரைவில் இந்திய அரசு மாகாண சபைகள் மற்றும் அதற்கான அதிகாரங்கள் பற்றிய தனது பேச்சுகளை நிறுத்திவிடும் என்று இந்திய வெளியுறவு செயலாளர் எச்சரித்தாரோ தெரியவில்லை.

மேலும், இந்தியா அக்கறை காட்டாவிட்டால் மாகாணசபை அமைப்பு முறையையே ராஜபக்சக்களின் அரசு புதிய அரசியல் அமைப்பின் மூலம் இல்லாதொழித்து விடுமோ என்ற பயமும் இந்திய பிரதமருக்கு கடிதம் எழுதிய கட்சிகளின் தலைவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது என்றும் கூறலாம். வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகளில் முதலமைச்சர்களாவதற்கும், அமைச்சர்களாவதற்கும், சபை உறுப்பினர்களாவதற்கும் அவர்களிற் பலர் இரவு பகலாக கனவுகளுடன் இருப்பதுவும் தெரிந்ததே.

13வது தொடர்பான எதிர்காலச் சாத்தியங்கள் என்பது இந்தியப் பிரதமருக்கென கடிதம் கொடுத்துள்ள கட்சிகள் அது தொடர்பாக எவ்வாறு தொடர்ந்து செயற்படப் போகின்றன, இந்திய அரசு எந்த அளவுக்கு அக்கறையுடன் இவ்விடயத்தில் ஈடுபாடு காட்டிச் செயற்படப் போகிறது? மேலும் இலங்கை அரசு இவ்விடயத்தில் எந்தளவுக்கு மனப்பூர்வமாக ஈடுபாடு காட்டப் போகிறது என்பவற்றைப் பொறுத்தே அமையும்.

**கேள்வி:- இலங்கை - இந்திய உடன்படிக்கை செய்யப்பட்டு 35 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னும் 13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவது பற்றியே பேசப்படுகிறது. இப்பொழுது இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதப்படுகிறது. இந்தப் பலவீனமான நிலைமைக்குக் காரணம் என்ன?**

பதில்:- 2009 வரை தமிழ்ச் சமூகத்தின் மிக மிகப் பெரும்பான்மையினர் தமிழீழக் கனவுலகில் இருந்தார்கள். 2009 லிருந்து 2012ஆம் ஆண்டு வரை மிகப் பெரும்பான்மையான தமிழ் மக்களின் பிரதிநிதிகள் 13வது திருத்தத்தின்படியான மாகாணசபைகள் தும்புக் கட்டையாலும் தொடக்கூடாத அளவுக்கு தீண்டத் தகாதவைகள் என்றார்கள்: அதற்குப் பின்னர் மாகாண சபைகளின் பதவிகளில் அமர்ந்தபோதும் அது பயனற்றது என்பதை எப்படியாயினும் நிரூபிப்பதில் தங்களின் ஆளுமைகளையும் திறமைகளையும் பிரயோகித்தார்கள்: 2015லிருந்து 2019வரை ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி உடையதாக புதிய அரசியல் யாப்பைத் தாங்கள் கொண்டுவரப் போவதாகக்கூறி கிடைத்த அரிய வாய்ப்பை பயனற்றதாக்கினார்கள். இப்போது ராஜபக்சக்கள் மாகாணசபை முறையையே இல்லாமற் செய்து விடுவார்களோ என்று அச்சம் கொண்டு இருப்பதையாவது காப்பாற்றிக் கொள்ள விழித்திருக்கிறார்கள் போல் தெரிகிறது.

**கேள்வி :- 1987ல் மாகாண சபை முறைமையை புலிகள் நிராகரித்த சூழலில் நீங்கள் அதனைப் பொறுப்பேற்றிருந்தீர்கள். அதனால் பல நெருக்கடிகளையும் சந்தித்திருந்தீர்கள். 35 ஆண்டுகளுக்குப் பிறகு இப்பொழுது மாகாண சபையை வலுப்படுத்துமாறு கேட்கப் படுகிறது. இதில் உங்களுடைய பாத்திரம் என்ன? இந்த வரலாற்றின் போக்கென்ன?**

பதில்:- இப்பொழுது நான் ஒரு சாமான்யன். சமூக அரசியற் பார்வையாளன். என் ஆத்ம திருப்திக்காக அரசியல் பொருளாதார விடயங்கள் தொடர்பில் எழுதுகிறேன் - பேசுகிறேன். இலங்கையின் மாகாண சபைகள் தொடர்பில் என்னுடைய பாத்திரம் என்ன என்று குறிப்பாகக் கேட்கிறீர்கள் என நினைக்கிறேன். அந்த விடயத்தில் நான் பெற்றுள்ள அனுபவங்களையும் எனது அரசியல், பொருளாதார மற்றும் அரசியல் யாப்பு தொடர்பான சட்ட அறிவையும் யாராவது என் மீது நம்பிக்கை கொண்டு பகிர்ந்து கொள்ள விரும்பினால் அவர்களோடு உரையாடுவேன். அதற்கு மேல் இவ்விடயத்தில் எனக்கு வேறெந்தவொரு பங்கும் பாத்திரமும் இருப்பதாக நான் உணரவில்லை. அதற்கான சாத்தியங்களும் இல்லை.

**கேள்வி:- தற்போதைய இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரோடு உங்களுக்கு 30 ஆண்டுகளுக்கு மேலான நட்புறவுண்டு. அவ்வகையில் 13ஐ அமுலாக்கம் செய்வதில் உண்மையாக இந்தியா அக்கறையாக இருக்கிறது என்று கருதுகிறீர்களா?**

பதில்:- அமைச்சர் ஜெய்சங்கர், 1988ம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து 1990ம் ஆண்டு இடைப்பகுதி வரை இலங்கையில் உள்ள இந்திய தூதரகத்தில் அரசியற் செயலாளராக இருந்தவர். அப்போது இலங்கையிலிருந்த இந்திய இராணுவத்தினருக்கு அரசியல் ஆலோசகராகவும் செயற்பட்டவர். வடக்கு-கிழக்கு மாகாண சபை தேர்தலை நடத்த வைப்பதிலும் அந்த மாகாண ஆட்சிக்கான இந்திய அரசின் ஒத்துழைப்புகளை பெற்றுத் தருவதிலும் பிரதானமான பங்காற்றியவர். அவை எல்லாவற்றையும் இங்கு விபரிப்பது பொருத்தமானதுமல்ல சரியானதுமல்ல என்று கருதுகிறேன்.

அவர் இலங்கையிலிருந்து மாற்றமாகிப் போனதன் பின்னர் அவருக்கும் இந்தியாவின் இலங்கை விவகாரங்களுக்குமிடையில் உத்தியோகபூர்வமாக எந்த வகையிலும் தொடர்பில்லாமல் போயினும் அவர் இலங்கை தொடர்பாக தொடர்ந்தும் உளப்பூர்வமான ஆர்வத்தைக் கொண்டிருந்தார் என்பதை இந்தியாவில் அவரைச் சந்தித்த பல வேளையில் என்னால் உணர முடிந்தது. 2015ம் ஆண்டு அவர் இந்திய அரசின் வெளிநாட்டு விவகார செயலாளராக ஆனதைத் தொடர்ந்து இலங்கையின் பல்வேறு விவகாரங்களிலும் மிக அக்கறையாக இருந்தார் என்பதை இலங்கையின் அனைத்து அரசியற் தலைவர்களும் நன்கு அறிவர். இப்போது அவர் இந்திய அரசின் வெளிநாட்டு உறவுகள் தொடர்பான அரசியல் முடிவுகளை எடுக்கும் இடத்தில் இருக்கிறார். இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் மிகுந்த நம்பிக்கைக்கு உரிய அமைச்சராக அவர் இருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உங்களைப் போன்றவர்களுக்கு இன்னும் சில தகவல்களையும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். இலங்கை விவகாரத்தோடு முன்னர் சம்பந்தப்பட்ட ஜெய்சங்கர் மட்டுமல்ல, 1987ம் ஆண்டு இலங்கை அரசின் ஒப்பரேசன் வடமராட்சியை நிறுத்தும் வகையாக இந்திய மிராஜ் விமானங்கள் உணவுப் பொட்டலங்களைப் போட்டதைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இந்திய வெளிவிவகார அதிகாரியான ஹர்தீப் பூரி, இப்போது பிரதமர் நரேந்திர மோடி அரசின் அமைச்சரவையில் மிகப் பிரதானமானதொரு அமைச்சராக இருக்கிறார். இந்த பூரி அவர்களுக்குத்தான் யாழ்ப்பாணத்து மக்கள் மிகுந்த பூரிப்புடன் மாலையுமிட்டு பொட்டும் வைத்து வரவேற்றார்கள் என்பதுவும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அத்தோடு இன்னுமொரு தகவலையும் அறிந்து கொள்ளுங்கள்,

அதாவது 1987ம் ஆண்டுக்கும் 1990ம் ஆண்டுக்கும் இடையில் இலங்கையில் இருந்த இந்திய இராணுவத்தில் ஒரு மேஜர் என இருந்து பின்னர் அங்கே இருக்கும் போதே லெப்டினட் கேர்ணல் என பதவி உயர்வு பெற்று கொண்டு கடமையாற்றிக் கொண்டிருந்த வி.கே. சிங், பின்னர் இந்திய இராணுவத்தின் தளபதி ஆனார். அவரும் இப்போது பிரதமர் நரேந்திய மோடி அரசின் மிகப் பிரதானமானதொரு அமைச்சராக இருக்கிறார்.

எனவே இப்படியானவர்களைக் கொண்டிருக்கிற அரசைக் கொண்டு இலங்கை வாழ் தமிழ் மக்களின் நலன்கள் மீது உண்மையான அக்கறை கொண்டவர்களே இலங்கையில் உள்ள மாகாண சபைகளை சிறப்புற - காத்திரமானவையாக அதாவது 13வதை முழுமையாக - முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும்.

சாதகமான சூழ்நிலைமைகள் ஏற்பட்டாலும் அதனூடாக தமக்கு உரியவற்றை - தேவையானவற்றை சாத்தியமாக்குவதற்கு ஒரு சமூகத் தலைமைக்கு தெளிவான அறிவும் புத்திபூர்வமான செயற்பாடும் வேண்டும். அதிலிருந்தே இலங்கை வாழ் தமிழர்களின் அபிலாஷைகள் சாத்தியமாக முடியுமா அல்லது முடியாதா என்பதை முடிவு செய்ய முடியும்.

இதையெல்லாம் எப்படி நீங்கள் கூறுகின்றீர்கள் என்று நீங்கள் கேட்டால் உங்கள் கேள்விலேயே பதிலும் இருக்கிறது என்பேன். இந்திய மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் மற்றும் இந்திய மத்திய அமைச்சர் ஹர்தீப் பூரி மட்டுமல்ல, அவர்களின் நெருங்கிய நண்பர்களாகவும் இந்திய வெளிவிவகார கொள்கைகளை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துபவர்களாவும் உள்ள பேராசிரியர்கள், பத்திரிகையாளர்கள், சமூக அரசியல் ஆய்வாளர்கள் என உள்ள பலரோடு எனது நட்பு உள்ளது. அந்த வகையில், இந்திய அரசின் சமகால போக்கை அறிந்து கொள்ளக் கூடிய வாய்ப்பை சந்தர்ப்ப சூழ்நிலைகளால் பெற்றுள்ளேன் எனலாம்.

இந்திய அரசின் அமைச்சர்களாக ஜெய்சங்கர், ஹர்தீப் பூரி மற்றும் ஜெனரல் வி கே சிங் போன்றவர்கள் இருந்தாலும் அந்த சாதகங்களை எவ்வளவு தூரம் தமிழர்களுக்கான சாதகங்களாக மாற்றிக் கொள்ளப் போகின்றார்கள் என்பதை இலங்கைத் தமிழர்களின் சட்டபூர்வமான பிரதிநிதிகள்தான் கண்டறிந்து செயலாற்ற வேண்டும்.

**கேள்வி:- இலங்கை அரசியலில் 13வது என்பதே சர்ச்சைக்குரியதாகவே உள்ளது. சில தரப்புகள் 13ஆவதை நிராகரிக்கின்றன. உங்களுடைய நிலைப்பாடு என்ன?**

பதில்:- பல கட்சிகள் கொண்ட ஜன நாயக அமைப்பில் எல்லோரும் எல்லா விடயங்களையும் ஏற்பார்கள் என்றில்லை. பெரும்பான்மையான மக்கள் ஏற்றுக் கொள்வதையே மக்கள் அபிப்பிராயம் என்கிறோம். எனினும், பெரும்பான்மை என்ற வகையில் மேற்கொள்ளப்படும் இன மேலாதிக்கம் மற்றும் சாதி மேலாதிக்கங்கள் எதிர்க்கப்பட வேண்டியவை.

இங்கு தமிழ் மக்களின் அரசியல், பொருளாதார சமூக உரிமைகள் என வருகின்றபோது தமிழர்களிற் பெரும்பான்மையானவர்களின் அந்தந்த காலகட்டங்களிற் கொள்கின்ற - வெளிப்படுத்துகின்ற அபிலாஷைகளையே தமிழர்களின் அபிலாஷைகள் எனக் கொள்வதே சரியானதாகும். அதுவும் அந்த அபிலாஷைகள் நடைமுறைச் சூழலுக்கும் சாத்தியங்களுக்கும் பொருத்தமானவையாகவும் அமைய வேண்டும். ஒரு சமூகத்தின் விருப்பங்கள் அதி உச்சமானவையாக இருக்கக் கூடாது என்றில்லை. ஆனால் அவை ஏனைய இனத்தவர்களை, சமூகப் பிரிவினர்களை அச்சுறுத்துபவையாகவோ அல்லது ஆபத்துக்கு உள்ளாக்குபவையாகவோ அமையக் கூடாது. மேலும் அவற்றை அடைவதற்கு எந்தப் பாதைகளின் ஊடாக எத்தனை படி முறைகளினூடாக செல்ல வேண்டும் - செயற்பட வேண்டும் என்பவற்றை கவனத்திற் கொண்டு அரசியல் சமூக செயற் திட்டங்களை முன்னடுப்பதுவும் பிரதானமானதாகும்.

இங்கிருப்பது மக்கள் பிரதிநிதித்துவ ஜனநாயகம். எனவே இங்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்களை மட்டுமல்ல தமிழப் பேசும் அனைத்து மக்களையும் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களில் மிகப் பெரும்பான்மையானவர்கள் அரசியல் யாப்பின் 13வது திருத்தத்தின்படி அமைந்த அதிகாரப் பகிர்வை முழுமையாக நிறைவேற்ற வேண்டும் என்ற தமது விருப்பத்தை வெளிப்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள். அது அவர்களின் விருப்ப வெளிப்பாடு மட்டும்தானா அல்லது அதை எப்படி சாதிக்கப் போகிறார்கள் என்ற கேள்விகளுக்கான விடைகளை பொறுத்திருந்தே பார்க்கலாம்.

13வது திருத்தத்தை நிராகரிப்பவர்கள் தமிழ் மக்களின் பெரும்பான்மையான பிரதிநிதித்துவத்தைப் பெறுகிற போதே அந்த நிராகரிப்பு தமிழ் மக்களின் நிராகரிப்பாக அமையும். அந்த நிலைமை இப்போது இல்லை.

**கேள்வி:- வடக்கு - கிழக்கு இணைப்பில் முஸ்லிம்களின் நிலைப்பாட்டை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

பதில்:- கிழக்கு மாகாணம் தனியாக இருக்கும்போது கிழக்கில் வாழும் தமிழர்களின் வீதாசாரமும் முஸ்லிம்களின் வீதாசாரமும் ஏறத்தாழ சமமாகும். கிழக்கு தனியாக இருக்கின்ற போது ஒரு முஸ்லிம் இனத்தவரும் முதலமைச்சராகலாம். அது இணைந்த வடக்கு கிழக்கில் சாத்தியமாகாது. வடக்கும் கிழக்கும் இணைந்தால் முஸ்லிம் மக்களின் சனத்தொகை 20 சதவீதத்தை அண்மித்ததாகவே இருக்கும். மொத்த இலங்கையில் சிங்கள பௌத்த பேரினவாத மேலாதிக்கம் எப்படி செயற்படுகிறதோ அவ்வாறாக இணைந்த வடக்கு கிழக்கில் தமிழின மேலாதிக்கம் செயற்படும் எனும் அச்சம் முஸ்லிம் மக்கள் மத்தியில் நிலவுகின்றமை புரிந்த கொள்ளப்படக் கூடிய ஒன்றே.

அந்த அச்சத்தை நீக்குவதற்கு தமிழர்களின் பெருந்தன்மை எனும் வகையிலான வாக்குறுதிகள் பயன்படமாட்டா. மாறாக முஸ்லிம் மக்களின் அரசியல் பொருளாதார மற்றும் சமூக நலன்கள் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் தமிழர்கள் மத்தியிலுள்ள பெரும்பான்மையான அரசியற் பிரதிநிதிகளுக்கும் முஸலிம் மக்களின் மத்தியிலுள்ள பெரும்பான்மையான அரசியற் பிரதிநிதிகளுக்கும் இடையில் ஓர் உறுதியான - வெளிப்படையான உடன்பாடு ஏற்படும் வரை வடக்கு - கிழக்கு இணைப்பை முஸ்லிம் மக்கள் ஏற்க மாட்டார்கள். அவ்வாறான உடன்பாடில்லாதவரை தமிழர்களின் வடக்கு - கிழக்கு இணைப்பு கோரிக்கையை முஸ்லிம் மக்கள் தமது இனத்துக்கு எதிரான கோரிக்கையாகவே பார்ப்பார்கள்.

**கேள்வி:- தமிழரின் அரசியற் பிரச்சினைக்கு இந்தியா, இலங்கை, மேற்குலகம், சீனா என்பவற்றில் எதனுடனான உறவு சாதகத்தைத் தரும்?**

பதில்:- தமிழரின் தேசியப் பிரச்சினைக்கான தீர்வுக்கு இந்தியா மட்டுமே உதவும் என்றும் மேற்குலகு நாடுகளும் இந்தியாவின் நிலைப்பாட்டை ஒட்டியே செயற்படுவன என்றுமே தமிழர்களின் பிரதிநிதிகளாக உள்ளவர்களில் பெரும்பான்மையினர் கூறுகின்றனர். எவ்வாறாயினும் இலங்கை அரசே தீர்வுக்கான ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இலங்கை அரசுகள் தானாக இதுவரை செயற்பட வில்லை என்பதுவும் அனுபவமாகும். இலங்கை அரசை செயற்பட வைப்பதற்கு இந்தியா மற்றும் மேற்குலக நாடுகளின் உதவி தேவை என்பதே தமிழர்கள் மத்தியிலுள்ள பொதுவான அபிப்பிராயமும் எதிர்பார்க்கையாகவும் உள்ளது.

சீனா இதுகாலவரை தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் ஒன்று - எனவே இவ்விடயத்தில் வெளிநாடுகள் எதுவும் தலையிடக் கூடாது என்ற நிலைப்பாட்டுடன் அது பற்றி இலங்கை அரசுடன் எந்த வகையிலும் பேசுகின்ற நடைமுறைகளைக் கொண்டிருக்கவில்லை. மேற்குலக நாடுகள் மற்றும் இந்தியா தொடர்பாக அச்சம் அல்லது விரோதம் கொண்டுள்ள நாடுகளின் அரசுகளுக்கு துணையாக நிற்பதன் வழியாகவே சீனா தனது சர்வதேச உறவுகளை விரிவுபடுத்தி வருகிறது.

சீனா தமிழர்களுக்கு அரசியல்ரீதியில் சாதகமானதான நிலைப்பாடு கொள்வதற்கான சாத்தியங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் சீனாவை தமிழர்கள் பகைமை நாடாகக் கொள்வது அவசியம்தானா என்பது இங்கு விடை காணப்பட வேண்டிய கேள்வியாகவே உள்ளது.

**கேள்வி:- 13 பொருத்தமற்றது, சமஷ்டி அல்லது அதற்கு மேலாக என அ.இ.த.காங்கிரஸ் (கஜேந்திர குமார்) சொல்கிறதே?**

பதில்:- ஒற்றையாட்சியை பிடிவாதமாகக் கொண்டு பிரதேச சுயாட்சியையும் எதிர்த்து வந்த தமிழ்க் காங்கிரஸ் கட்சியை சமஷ்டி என்ற கோரிக்கையை வைத்து தமிழரசுக் கட்சியின் தலைமை தமிழர்களிடமிருந்த ஓரம் கட்டியது. இன்று ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பேரன் அதே சமஸ்டியை வைத்து ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வைக் கோரும் தமிழரசுக் கட்சியை தமிழ் மக்களிடையே இருந்து ஓரம் கட்டுவதற்கு முயற்சிக்கிறார்.

இது அடுத்து வரும் தேர்தலுக்கான வாக்கு வங்கியை தக்க வைப்பதற்கும் விரிவுபடுத்துவதற்குமான போட்டி - தேர்தல் அரசியல் போட்டி. அடுத்துவரும்தேர்தலில்பெரும்பான்மையான தமிழ் மக்கள் தமது வாக்குகள் மூலமாக என்ன சொல்லப் போகின்றார்கள் என்பது தமிழர்களின் அடுத்த கட்ட பிரதானமான அரசியற் போக்கைத் தீர்மானிக்கும் எனக் கூறலாம்.



மாகாண சபைக்குரிய பொலிஸ் சேவைக்கு இணைக்கப்பட்ட பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்ளும் அப்போதைய முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் அவர்களும் ஆளுநரும்...

**நேர்கண்டவர்: அரவிந்தன்**

Fish & Meat Cart
Online Home Delivery

# YOU STAY SAFE AT HOME
# WE DELIVER


FRESH HIGH QUALITY FISH & MEAT

HYGIENICALLY CLEANED & CUT TO YOUR SIZE NEEDS

0431-102-334
SCAN THIS CODE
TO START A WHATSAPP CHAT WITH US

Fish And Meat Cart
WhatsApp business account

SOURCED FROM LOCAL SEAFOOD MARKETS & BUTCHERS



PRE-ORDER ONLY
ORDER BY 12 PM
FOR SAME DAY DELIVERY



ONLINE SHOP COMING SOON
WWW.FISHMEAT.COM.AU

# மெல்பேர்னில் பொங்கல் விழா




தாயக கலாசார
ஆபரணங்கள்
மெல்பேர்ணில்...
லக்கி
நகைத் தொழிலகம்
LUCKY JEWELLERY
பொன்னுருக்குதல்
தாலி செய்தல்
கல்யாண மோதிரம்
காது குத்துதல்
தமிழ் எழுத்துகளில் ஆபரணங்கள்
திருத்த வேலைகள் உடனடியாக
14/38 Mccrae Street, Dandenong VIC3175
luckysankaran@gmail.com
LuckyJewelleryMelborne
0387121974, 0415233284








# பரமட்டா கண்மாய் பூர்வக்குடிகளின் காலக்கண்ணாடி!



நெ.செ.பரத்

நகர வாழ்க்கை ஓட்ட வேகத்தில் மன அழுத் தத்துக்குள் துவண்டு போய், இயற்கையின் அர வணைப்பில் இறுகிய மனங்களை ஒப்படைத்து - ஓய்வடைதல் என்பதே ஆத்ம சுகம். இவ்வாறான ஒரு இயற்கை வளங்களை கொண்ட - கொண்டாடிக்கொண்டிருக்கும் ஆஸ்திரேலிய தேசத்தில் பரமட்டா கண்மாய் ஒரு எழில் தோய்ந்த பிரமிப்பு என்று சொல்லலாம்.

பரமட்டா கண்மாய் என்ற பேரெழிலை அறிமுகப் படுத்தியது நண்பர் ஒருவர் தான். முதலில் ஆஸ்திரேலியாவில் அல்லது ஆஸ்திரேலியாவுக்கு வெளியே உள்ளவர்கள் எப்போதாவது பரமட்டா கண்மாய்க்கு செல்ல நினைத்தால், வாருங்கள் இக் கதையோட்டத்தினூடகவே அழைத்துச்செல்கின்றேன்.

சிட்னி நகரிலிருந்து மேற்கே சுமார் 30 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது பரமட்டா. வடக்கு பரமட்டாவில் இருந்து 609 என்ற எண்ணுடைய பஸ்ஸை பிடித்து ஏறினீர்கள் என்றால் நேரடியாக பரமட்டா கண்மாய்க்கு அருகிலேயே இறக்கிவிடுவார்கள்.

பரமட்டா கண்மாயை சென்றடைந்தவுடன் கண்ணில் பட்டது பரமட்டா கண்மாய் நீர்த்தேக்கம் (லேக் பரமட்டா ரிசர்வ்) என்று கல்திட்டில் பொறிக்கப்பட்ட பெயர்ப் பலகையும் அதை தாங்கிப்பிடித்தவாறு நின்றுகொண்டு இருந்த ட்ராகன் பல்லிகள் என்று சொல்லக்கூடிய ராட்சத பல்லிகள்தான் . இந்த பல்லியை போன்று சிறிய பெரிய வகைகள் பரமட்டாவில் நிறைய பார்த்து இருக்கிறேன்.

பரமட்டாவின் காட்டுக்குள் கண்ணாமூச்சி ஆடும் ஓர் இயற்கை அழகு இந்த 73 ஹெக்டர் நிலப்பரப்பில் அமைந்துள்ள பரமட்டா கண்மாய் நீர்த்தேக்கம்.

1856-இல் கட்டி முடிக்கப்பட்ட இந்த அணை 1909 ஆம் ஆண்டு வரை உபயோகத்தில் இருந்தது. அதன் பின்னர் கேளிக்கை தலமாக உருமாறியது. பொறியியலின் துணை கொண்டு ஆஸ்திரேலியாவில் கட்டப்பட்ட முதல் அணை இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. வானவில் போல் வளைந்து இருக்கும் இந்த அணையின் ஒரு புறத்தில் பரமட்டா கண்மாயும் மறுபுறத்தில் அடர்ந்த வனமும் கண்கவர் காட்சியாய் இருந்தது.

கண்மாயின் கரையில் ஒருவர் “மீன்பிடித்து மீண்டும் ஆற்றில் விட ஆசை” என்று மீன்களை பிடித்து ஒவ்வொன்றாய் மீண்டும் கண்மாயில் விட்ட படி அமர்ந்திருந்தார். அந்த காட்சியை கண்டவுடன் என் எண்ண ஓட்டம் ஏனோ சில நூற்றாண்டுகளுக்கு முன் பயணித்தது. அண்மையில் தான் பூர்வக்குடிகளுக்காக சிட்னியில் அதிகமானோர் திரண்டு அம்மக்கள்மீது திணிக்கப்பட்ட அதிகார வர்க்கத்தினருக்கு எதிராக குரல் கொடுத்தனர். ஆஸ்திரேலிய தினத்தின் திகதியை மாற்றிவிடுங்கள் என குரல் கொடுத்தனர். இந்த போராட்டத்தின் எதிரொலிதான் என்னை பல நூற்றாண்டுகள் பின்னோக்கி இழுத்துச் சென்றது.

ஆஸ்திரேலியாவின் மூத்த குடிகளில் ஒன்றான “தாருக்” இனத்தை சேர்ந்த “புர்ராமட்டகள்” மற்றும் “பிடிஜிகள்” குடி மக்களின் வாழ்விடமாக பல்லாயிரம் ஆண்டுகளாக திகழ்ந்தது தான் நான் இன்று நின்று கொண்டிருக்கும் பாரமட்டா கண்மாய் நீர்த்தேக்க பகுதி. ஏராளமான நீர் வளமும், மீன்கள், காய் கனிகள் என பல்வேறு உணவு வகைகளும் கிடைக்கும் இந்த பகுதி அம்மக்களின் வாழ்வாதாரமாய் இருந்தது.

இணைய கணிப்பின்படி 1700-கள் வரை அந்த மக்கள் இங்கே வாழ்ந்து வந்தனர் எனவும், 1800-களில் ஆங்கிலேய ஆக்கிரமிப்புகள் காரணமாக இந்த பகுதி நாம் இன்று காணும் கேளிக்கை தலமாக மாறியதாகவும் அறியப்படும் செய்தி வலியை தந்தது.

இந்த பிடிஜிகள் மக்களின் சிறப்பு என்னவென்றால் 1788-இல் முதன்முதலாய் ஆஸ்திரேலியாவை ஆங்கிலேயர்கள் ஆக்கிரமிக்க வந்தபோது அவர்களை எதிர்த்து போராடியவர்கள் இந்த பிடிஜிகள் மக்கள் தான். பெமுல்வி என்ற பழங்குடியின போராளியின் தலைமையில் பிடிஜிகள் மக்கள் அந்த போராட்டத்தில் ஈடுபட்டார்கள். பெமுல்வியின் சாதனையை பறைசாற்றும் விதத்தில் மேற்கு சிட்னியின் ஒரு புறநகர் பகுதிக்கு அவரது பெயர் சூட்டப்பட்டுள்ளது என்பது வரலாறு.

இன்றளவும் இந்த நீர்த்தேக்க நிலப்பரப்பில் ஆங்காங்கே பழங்குடி மக்களின் வாழ்வியல் சுவடுகளான சின்னங்கள், ஓவியங்கள், சிதைந்து போன தளவாடங்கள் காணப்படுகின் றன. வரலாற்றாளர்களின் கூற்றின் படி இதைப்போன்று இன்னும் பல சுவடுகள் 1850-களில் இந்த அணை கட்டியபோது சிதைந்திருக்க கூடும் என்பதேயாகும்.

எங்கிருந்தோ வந்த ஒரு சிறுவனின் சிரிப்பு சத்தம் கடந்த கால வரலாற்று பயணத்தில் இருந்து மீண்டும் நிகழ்கால நிஜங்களை நோக்கச்செய்தது.

கண்மாயின் நீர்ப்பரப்பு நம்மை அரவணைக்க அழைத்தது. நீச்சலிடுவதற்கு என வரையறுக்கப்பட்ட எல்லைக்குள் முதல் அடி வைத்தேன் (குழந்தைகள் ஜாக்கிரதை!). நீரில் முதல் அடி சில்லென ஒரு உணர்வை விலா வரை வியாபிக்கச் செய்தது. நீச்சல் தெரியாத காரணத்தால் சற்று மெல்ல அடி வைத்த என்னை கால்களுக்கு அடியில் சில பாறை களும் கற்களும் வரவேற்றது. யார் கண்டார்கள் அந்த பாறைகளில் கூட தொலைந்து போன காலச்சுவடுகள் இருக்கக்கூடும். நீரில் நேரம் செல்லச்செல்ல உடலோடு மனமும் இலகுவானது. அடுத்த ஒரு மணி நேரம் நீரில் அளவளாவிய பின் எனக்குள் தோன்றிய கேள்வி “நிலத்தில் இருக்கும் நம் கவலைகள் நீரில் மட்டும் நம்மை அவ்வளவாக பாதிப்பது இல்லையே?”

அடுத்ததாக கண்மாயை சுற்றியுள்ள புஷ் வாக் எனப்படும் காட்டுப்பகுதி அடர்ந்த மரங்களின் அணிவகுப்புகிடையில் நடந்து சென்று இரண்டு மணி நேரங்களை இயற்கையென்னும் அழகியல் விழுங்கியிருந்தது. ஆங்காங்கே சிற்றோடையின் சத்தம் நம்மை சிலிர்க்க வைத்தது. இங்கேயே தங்கி விடுவோமா என்று குழந்தையென மனம் கேள்வி கேட்டது. (எங்கிருந்து வந்தோமோ அங்கேயே செல்ல துடிக்கும் முனைப்பு தான் போலும்)

நடையை முடித்து நடையை கட்டுவோம் என நினைக்கும் தருவாயில் சில கற்சிலைகள் கண்ணில் பட்டன, அதில் ஒன்று இரு தவளைகளின் சிலை. கண்டமாத்திரத்தில் எனக்கு ஒன்றும் விளங்கவில்லை என்ற போதிலும், இன்னும் இப்படி நம் அறிவுக்கு எட்டாத விடயங்கள் எத்தனை இருக்கிறனவோ என்ற ஒரு ஆவல் மட்டும் மேலோங்கியது. நகரப் பகுதியில் இப்படி ஒரு ஆச்சரியமான கண்மாயை பார்த்து திரும்பி வருகையில் என்னதான் இயற்கை அழகு என் மனதில் வியாபித்து இருந்தாலும், இதே நிலப்பரப்பில் பல்லாயிரம் ஆண்டு காலமாய் வாழ்ந்த பழங்குடி மக்களின் தடத்தில் தான் நாம் நடந்து கொண்டு இருக்கிறோம் என்ற உணர்வு தான் மேலோங்கி இருந்தது.





# மெல்லக்கொல்லும் மன அழுத்தம்!



மன அழுத்தத்தால் ஒருவர் தன் உயிரையும் மாய்த்து - மற்றவர்களை கொலை செய்யுமளவுக்கு வந்து கொண்டிருக்கும் செய்திகளை அன்றாடம் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவ்வாறான செயற்பாடுகள் அதிகமாக இடம்பெறுவது புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் என அண்மைய செய்திகள் வெளிக்காட்டி இருக்கின்றன. இந்நிலையில் தான் சிட்னியில் பிரபல மனநல வைத்தியர் ரைஸின் பர்வையில் மனஅழுத்தம் குறித்த தகவல் அடங்கிய தகவலை சுமந்து வருகிறது இப்பக்கம்.

**கேள்வி: மன அழுத்தம் என்றால் என்ன - அதன் அறிகுறிகள் எவை என்பதை முதலில் விளக்கிவிடுங்களேன் ?**

பதில்: மன அழுத்தம் என்பது உலகில் அதிகமாக காணப்படக்கூடிய மன நோய்களில் ஒன்று. பொதுவாக காணப்படக்கூடிய மன நோய்களான மனப்பதற்றம், இரு முனைப் பிறழ்வு, மனச்சிதைவு போன்ற மன நோய்களில் பொதுவாக, சற்று அதிகமாக காணப்படும் ஒரு மனநோய்.

மன அழுத்தத்தில் என்னென்ன அறிகுறிகள் காணப்படும் என்றால், தாழ்வான மனநிலை, எதிலும் ஒரு நாட்டமில்லாத நிலை, தூக்கத்தில் குறைபாடு அதாவது பொதுவாக தூக்கம் குறைவாக இருக்கும். ஆனால் மனஅழுத்தம் வந்த சிலர் அளவுக்கு அதிகமாக தூங்குவர். பசியில் குறைபாடு, பொதுவாக பசி குறையும். ஆனால் ஒரு சிலருக்கு மனஅழுத்தம் வந்தால் பசி அளவுக்கு அதிகமாக இருக்கும். மிகக் குறைவான சகிப்புத்தன்மை, அதனால் சட்டுசட்டென கோபப்படுவது, கவனச் சிதைவு, ஆற்றல் குறைவாக உணர்தல், உந்துதல் இல்லாத நிலை, திடிர் பதற்றம், எதிர்காலமே இருண்டது போல உணர்தல், இதுவே கொஞ்சம் அதிகமானால் தமக்கு யாருமே உதவமாட்டார்கள், தான் இந்த நிலையிலிருந்து தப்பிக்கவே முடியாது என்பது போல் உணர்தல், இந்த நிலை இன்னும் சற்று அதிமானால் தான் இவ்வுலகில் வாழ்வதே அர்த்தமற்றது என்ற உணர்வு ஓங்கி, தற்கொலை எண்ணங்களும் வரலாம். தற்கொலை எண்ணமில்லாத மனஅழுத்தம் தான் நிறைய பேருக்கு இருக்கிறது. அதனை சற்று தீவிரம் குறைந்த அல்லது மிதமான மன அழுத்தமாக கருதலாம்.

ஒருவர் மன அழுத்தத்துக்கு முன்னர் ரசித்த அல்லது விரும்பிய அவரை மகிழ்விக்கக்கூடிய விடயங்கள் அவரை தற்போது மகிழ்விக்காத நிலையை ஆங்கிலத்தில் anhedonia என்பர். அதாவது உதாரணத்துக்கு, ஒருவர் இசைகேட்கும் போது அவருடைய மனம் மகிழ்வடைகிறது என்று வைத்துக்கொள்வோம். அவருக்கு மன அழுத்தம் இருக்கும் போது அதே இசையைக் கேட்டாலும் அவரின் மனது மகிழ்வுறாது. இதுவும் மனஅழுத்தத்தின் ஒரு முக்கிய அறிகுறியாகும்.

**கேள்வி: அப்படியென்றால், அன்றாட வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் மனச்சோர்வுக்கும் (stress) இதற்கும் என்ன வித்தியாசம் ?**

பதில்: இதை ஒரு உடல் உபாதையை ஒப்பிட்டுப் புரிய முயற்சிப்போமே? உதாரணத்திற்கு மனச்சோர்வு என்பதை சாதாரண காய்ச்சலைப் போன்று எடுத்துக் கொள்வோம். காய்ச்சல் என்பது எல்லோருக்கும் அவ்வப்போது வந்து போவது தான். நாமே அதற்கு வீட்டில் கை மருந்தோ இல்லை paracetamol லோ எடுத்து சரி செய்துக் கொள்வோம். சாதாரண காய்ச்சல் இப்படி எளிதாக சரியாகி விடுகிறது தானே? அது போல் தான் மனச் சோர்வும். இப்ப, அதே காய்ச்சல் மூன்று நாளாகியும் சரியாகவில்லை என்றாலோ அதனோடு சேர்ந்து இருமல், சோர்வு, வாந்தி போன்ற இன்ன பிற அறிகுறிகள் இருந்தாலோ நாம் என்ன செய்வோம்? நமது பொது மருத்துவரிடம் போவோம். அவர் தேவைப்பட்டால் சில பரிசோதனைகள் செய்வார் அல்லது மேலும் சில மருந்துகளை தருவார் அல்லது தேவைப்படும் பட்சத்தில் பிரத்யேகமான மருத்துவரிடம் நம்மை அனுப்புவார்.




அது போல தான் ஒருத்தருக்கு மனஅழுத்தம் இருக்கிறதா இல்லையா என்பதும் அறிகுறிகளின் தீவிரம் மற்றும் அவை நீடிக்கும் கால எல்லையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. நான் ஏற்கனவே சொன்ன அறிகுறிகள் குறைந்தது இரண்டு வாரங்களுக்கோ இல்லை அதற்கு மேலாகவோ தொடர்ந்து இருந்து அவர்களது சொந்த வாழ்க்கையையோ அல்லது அவர் சார்ந்துள்ள தொழிலையோ பாதித்தால் மட்டுமே மனஅழுத்தம் இருக்கிறது என்று நாம் சொல்லலாம். அப்படி இல்லை என்றால் அது அன்றாட வாழ்கையில் வரக்கூடிய மனச் சோர்வாக இருக்கலாம்.

**கேள்வி: அது சரி, தனக்கு வந்திருப்பது மன அழுத்தமா, மனச்சோர்வா, பதற்றமா , மனச்சிதைவா அல்லது இருமுனைபிறழ்வா என்று எப்படி ஒரு சாதரண பொதுமகன் அறிந்துகொள்ள முடியும்..?**

பதில்: அதற்கு ஆஸ்திரேலியாவில் நாம் முதலில் அணுகவேண்டியது நமது பொது மருத்துவரைத்தான். எப்படி காய்ச்சல் வந்தால் மூன்று நாளாகியும் சரியாகவில்லை என்றால் பொதுமருத்துவரை அணுகுகிறோமே அது போலவே இதற்கும் நாம் அவரைத் தான் முதலில் அணுக வேண்டும். ஆஸ்திரேலியாவிலுள்ள பொது வைத்தியர்கள் அனைவரும் மனபதற்றம் மற்றும் மனஅழுத்தத்திற்கு சிகிச்சையளிக்க நன்கு பயிற்சியளிக்கப்பட்டிருப்பர்.

அவர்களிடம் சென்றீர்கள் என்றால் அவர்கள் உங்களிடம் பேசி உங்களுக்கு ஏற்பட்டிருப்பது எந்த வகை நோய் என்று கண்டறிவார்கள். சாதாரண மனஅழுத்தம் என்றால் அவர்களே மருந்துகளை வழங்குவார். அல்லது மனவள ஆலோசகரிடம் அனுப்புவார்கள். அதேநேரத்தில் மனவழுத்தத்தின் தீவிரத்தன்மை அதிகமாக இருந்தாலோ இல்லை தற்கொலை எண்ணம் இருந்தாலோ அல்லது சில வித்தியாசமான அறிகுறிகள் இருந்தாலோ மனநல மருத்துவரிடம் அனுப்பி வைப்பார்கள்.

**கேள்வி: மனஅழுத்தம் எளிதில் மீளக் கூடிய நோய்தானா..?**

பதில்: ஆம் கட்டாயமாக! உலகத்தில் 10-15 வீதமானோர் இக்கணத்தில் மனழுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். 30-40 வீதமானோருக்கு வாழ் நாளில் ஒருமுறையாவது மனஅழுத்தம் தாக்கி செல்கிறதாம். எனவே இது ஒரு பொதுவான நோய்தான். முக்கியமாக முழுவதும் குணப்படுத்தக்கூடிய நோய்தான். தீவிரம் குறைந்த மனஅழுத்தமாக இருப்பின் மனவள- ஆலோசனையே போதும். அறிகுறிகள் சற்று தீவிரமாக இருப்பின் மனவள ஆலோசனையுடன் சேர்த்து மனநல வைத்தியரின் ஆலோசனையுடன் பிரேத்தியேகமான மாத்திரைகளையும் எடுத்துக்கொண்டால் விரைவில் நலம் பெறலாம்.

பொது மருத்துவர் ஏற்பாடு செய்து தரும் மென்டல் ஹெல்த் கேர் ப்ளான் எனும் பிரத்யேக அரசு திட்டத்தின் கீழ் வருடத்தில் 10-20 தடவைகள் medicare மூலமாகவே மனநல ஆலோசகரிடம் ஆலோசனை பெற முடியும். பணம் நம் கையிலிருந்து செலவழியும் என்று நினைக்கவேண்டாம். தற்போது மனநல மருந்துகள் அனைத்தும் பக்கவிளைவுகளற்ற அல்லது பக்க விளைவுகள் குறைவான முறையிலேயே தயாரிக்கப்படுகின்றன. தற்போது நடைமுறையில் இருக்கும் பெரும்பாலான மனநல மருந்துகள் நம்மை தூக்கத்தில் ஆழ்த்தாத மருந்துகளே. அதைப்பற்றி நீங்கள் பயப்படத்தேவையில்லை.

**கேள்வி: அண்மையில் பேர்த் நகரில் இலங்கையை சேர்ந்த ஒருவர் தனது பிள்ளைகள் இரண்டு பேரையும் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டிருந்த செய்தியை நீங்கள் படித்திருப்பீர்கள். அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் தான் மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர் என்றும் தான் அதற்கான மருத்து வத்தை பெற்றுவருகிறேன் என்றும் தற்கொலை எதற்கும் தீர்வில்லை என்றும் பதிவை போட்டிருந்தார். இவ்வாறு பதிவேற்றிய சுமார் ஆறு வராங்களில்தான் அவர் இவ்வாறான முடிவையெடுத்துள்ளார். மனஅழுத்தம் உள்ள ஒருவர் இவ்வாறான கொடூர செயலை செய்யக்கூடியவராக இருப்பாரா?**

பதில்: பொதுவாக அப்படி இருக்க மாட்டார்கள். இந்த குறிப்பிட்ட சம்பவத்தில் மனஅழுத்தால் பாதிக்கப்பட்டவரின் முழு தகவலும் நமக்கு தெரியவில்லை. பொதுவாக நான் மேற் சொன்ன அறிகுறிகள் தான் மனஅழுத்தத்தில் இருக்கும். மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டவருக்கு சகிப்பு தன்மை குறையலாம். இயலாமை மற்றும் ஆற்றாமை இரண்டும் அவர்களை பீடிக்கலாம். அதனால் அவர்களுக்கு சட்டு சட்டென கோபம் வர வாய்ப்பிருக்கிறது. இச்சம்பவத்தில் அந்த நபர் எவ்வாறு மன அழுத்தத்துக்குள்ளானார் என்பது குறித்தும் அவரது குடும்ப சூழ்நிலை போன்ற பல வகையான தகவல்களை அறிந்து கொண்டால் மட்டுமே சரியான பதில் வழங்க முடியும்.

**கேள்வி: புலம்பெயர்ந்தவர்கள் மன அழுத்தத்தால் அதிகமாக பாதிக்கப்பட வாய்ப்பிருக்கின்றதா ?**

பதில்: ஆம். பொதுவாக புலம்பெயர்ந்தவர்களில் மத்தியில் மன அழுத்தம் அதிகமாக காணப்படுகிறது. அதற்கான பிரதான காரணங்களாக சிலவற்றை சொல்லலாம். சொந்த ஊர் - உறவுகள் - நன்கு பழக்கப்பட்ட சூழலை பிரிந்து வாழ்தல், நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் மனச்சோர்வை பகிர்ந்துகொள்வதற்கு தோழமைகள் சொந்த பந்தங்கள் அருகில் இல்லாதிருக்கும் நிலை போன்றவை தான் அவை. பொதுவாக இலங்கை - இந்தியா போன்ற நாடுகளில் மனநோய்கள் குறித்த விழிப்புணர்வு குறைவாக இருப்பதும் ஒரு காரணமாகலாம். மேலும் போரினால் புலம் பெயர்ந்தவர்களின் நிலை கேட்கவே வேண்டாம். போரினால், கொடுமைகளால் ஏற்பட்ட மனக் காயங்களும் அக்காயங்களை விடவும் மிக முக்கிய காரணம்.

மனச்சோர்வு - மனப்பதற்றம் - இரு முனைப் பிறழ்வு மற்றும் மனச்சிதைவு குறித்து இன்னொரு சந்திப்பில் விரிவாக பேசுவோம் என்று விடைபெற்றார் மனநல வைத்தியர் ரைஸ்.

**நேர்காணல் : நேகா**

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI

மாசி 2022



# மெல்லக்கொல்லும் மன அழுத்தம்!

மன அழுத்தத்தால் ஒருவர் தன் உயிரையும் மாய்த்து - மற்றவர்களை கொலை செய்யுமளவுக்கு வந்து கொண்டிருக்கும் செய்திகளை அன்றாடம் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இவ்வாறான செயற்பாடுகள் அதிகமாக இடம்பெறுவது புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் என அண்மைய செய்திகள் வெளிக்காட்டி இருக்கின்றன. இந்நிலையில் தான் சிட்னியில் பிரபல மனநல வைத்தியர் ரைஸின் பர்வையில் மனஅழுத்தம் குறித்த தகவல் அடங்கிய தகவலை சுமந்து வருகிறது இப்பக்கம்.

**கேள்வி: மன அழுத்தம் என்றால் என்ன - அதன் அறிகுறிகள் எவை என்பதை முதலில் விளக்கிவிடுங்களேன் ?**

பதில்: மன அழுத்தம் என்பது உலகில் அதிகமாக காணப்படக்கூடிய மன நோய்களில் ஒன்று. பொதுவாக காணப்படக்கூடிய மன நோய்களான மனப்பதற்றம், இரு முனைப் பிறழ்வு, மனச்சிதைவு போன்ற மன நோய்களில் பொதுவாக, சற்று அதிகமாக காணப்படும் ஒரு மனநோய்.

மன அழுத்தத்தில் என்னென்ன அறிகுறிகள் காணப்படும் என்றால், தாழ்வான மனநிலை, எதிலும் ஒரு நாட்டமில்லாத நிலை, தூக்கத்தில் குறைபாடு அதாவது பொதுவாக தூக்கம் குறைவாக இருக்கும். ஆனால் மனஅழுத்தம் வந்த சிலர் அளவுக்கு அதிகமாக தூங்குவர். பசியில் குறைபாடு, பொதுவாக பசி குறையும். ஆனால் ஒரு சிலருக்கு மனஅழுத்தம் வந்தால் பசி அளவுக்கு அதிகமாக இருக்கும். மிகக் குறைவான சகிப்புத்தன்மை, அதனால் சட்டுசட்டென கோபப்படுவது, கவனச் சிதைவு, ஆற்றல் குறைவாக உணர்தல், உந்துதல் இல்லாத நிலை, திடீர் பதற்றம், எதிர்காலமே இருண்டது போல உணர்தல், இதுவே கொஞ்சம் அதிகமானால் தமக்கு யாருமே உதவமாட்டார்கள், தான் இந்த நிலையிலிருந்து தப்பிக்கவே முடியாது என்பது போல் உணர்தல், இந்த நிலை இன்னும் சற்று அதிமானால் தான் இவ்வுலகில் வாழ்வதே அர்த்தமற்றது என்ற உணர்வு ஓங்கி, தற்கொலை எண்ணங்களும் வரலாம். தற்கொலை எண்ணமில்லாத மனஅழுத்தம் தான் நிறைய பேருக்கு இருக்கிறது. அதனை சற்று தீவிரம் குறைந்த அல்லது மிதமான மன அழுத்தமாக கருதலாம்.

ஒருவர் மன அழுத்தத்துக்கு முன்னர் ரசித்த அல்லது விரும்பிய அவரை மகிழ்விக்கக்கூடிய விடயங்கள் அவரை தற்போது மகிழ்விக்காத நிலையை ஆங்கிலத்தில் anhedonia என்பர். அதாவது உதாரணத்துக்கு, ஒருவர் இசைகேட்கும் போது அவருடைய மனம் மகிழ்வடைகிறது என்று வைத்துக்கொள்வோம். அவருக்கு மன அழுத்தம் இருக்கும் போது அதே இசையைக் கேட்டாலும் அவரின் மனது மகிழ்வுறாது. இதுவும் மனஅழுத்தத்தின் ஒரு முக்கிய அறிகுறியாகும்.

**கேள்வி: அப்படியென்றால், அன்றாட வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் மனச்சோர்வுக்கும் (stress) இதற்கும் என்ன வித்தியாசம் ?**

பதில்: இதை ஒரு உடல் உபாதையை ஒப்பிட்டுப் புரிய முயற்சிப்போமே? உதாரணத்திற்கு மனச்சோர்வு என்பதை சாதாரண காய்ச்சலைப் போன்று எடுத்துக் கொள்வோம். காய்ச்சல் என்பது எல்லோருக்கும் அவ்வப்போது வந்து போவது தான். நாமே அதற்கு வீட்டில் கை மருந்தோ இல்லை paracetamol லோ எடுத்து சரி செய்துக் கொள்வோம். சாதாரண காய்ச்சல் இப்படி எளிதாக சரியாகி விடுகிறது தானே? அது போல் தான் மனச் சோர்வும். இப்ப, அதே காய்ச்சல் மூன்று நாளாகியும் சரியாகவில்லை என்றாலோ அதனோடு சேர்ந்து இருமல், சோர்வு, வாந்தி போன்ற இன்ன பிற அறிகுறிகள் இருந்தாலோ நாம் என்ன செய்வோம்? நமது பொது மருத்துவரிடம் போவோம். அவர் தேவைப்பட்டால் சில பரிசோதனைகள் செய்வார் அல்லது மேலும் சில மருந்துகளை தருவார் அல்லது தேவைப்படும் பட்சத்தில் பிரத்யேகமான மருத்துவரிடம் நம்மை அனுப்புவார்.



மருத்துவர் ரைஸ்

அது போல தான் ஒருத் தருக்கு மனஅழுத்தம் இருக்கிறதா இல்லையா என்பதும் அறிகுறிகளின் தீவிரம் மற்றும் அவை நீடிக்கும் கால எல்லையைப் பொறுத்தே தீர்மானிக்கப்படுகிறது. நான் ஏற்கனவே சொன்ன அறிகுறிகள் குறைந்தது இரண்டு வாரங்களுக்கோ இல்லை அதற்கு மேலாகவோ தொடர்ந்து இருந்து அவர்களது சொந்த வாழ்கையையோ அல்லது அவர் சார்ந்துள்ள தொழிலையோ பாதித்தால் மட்டுமே மனஅழுத்தம் இருக்கிறது என்று நாம் சொல்லலாம். அப்படி இல்லை என்றால் அது அன்றாட வாழ்கையில் வரக்கூடிய மனச் சோர்வாக இருக்கலாம்.

**கேள்வி: அது சரி, தனக்கு வந்திருப்பது மன அழுத்தமா, மனச்சோர்வா, பதற்றமா , மனச்சிதைவா அல்லது இருமுனைபிறழ்வா என்று எப்படி ஒரு சாதரண பொதுமகன் அறிந்துகொள்ள முடியும்..?**

பதில்: அதற்கு ஆஸ்திரேலியாவில் நாம் முதலில் அணுகவேண்டியது நமது பொது மருத்துவரைத்தான். எப்படி காய்ச்சல் வந்தால் மூன்று நாளாகியும் சரியாகவில்லை என்றால் பொதுமருத்துவரை அணுகுகிறோமே அது போலவே இதற்கும் நாம் அவரைத் தான் முதலில் அணுக வேண்டும். ஆஸ்திரேலியாவிலுள்ள பொது வைத்தியர்கள் அனைவரும் மனபதற்றம் மற்றும் மனஅழுத்தத்திற்கு சிகிச்சையளிக்க நன்கு பயிற்சியளிக்கப்பட்டிருப்பர்.

அவர்களிடம் சென்றீர்கள் என்றால் அவர்கள் உங்களிடம் பேசி உங்களுக்கு ஏற்பட்டிருப்பது எந்த வகை நோய் என்று கண்டறிவார்கள். சாதாரண மனஅழுத்தம் என்றால் அவர்களே மருந்துகளை வழங்குவார். அல்லது மனவள ஆலோசகரிடம் அனுப்புவார்கள். அதேநேரத்தில் மனவழுத்தத்தின் தீவிரத்தன்மை அதிகமாக இருந்தாலோ இல்லை தற்கொலை எண்ணம் இருந்தாலோ அல்லது சில வித்தியாசமான அறிகுறிகள் இருந்தாலோ மனநல மருத்துவரிடம் அனுப்பி வைப்பார்கள்.

**கேள்வி: மனஅழுத்தம் எளிதில் மீளக் கூடிய நோய்தானா..?**

பதில்: ஆம் கட்டாயமாக! உலகத்தில் 10-15 வீதமானோர் இக்கணத்தில் மனமுத்தத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். 30-40 வீதமானோருக்கு வாழ் நாளில் ஒருமுறையாவது மனஅழுத்தம் தாக்கி செல்கிறதாம். எனவே இது ஒரு பொதுவான நோய்தான். முக்கியமாக முழுவதும் குணப்படுத்தக்கூடிய நோய்தான். தீவிரம் குறைந்த மனஅழுத்தமாக இருப்பின் மனவள ஆலோசனையே போதும். அறிகுறிகள் சற்று தீவிரமாக இருப்பின் மனவள ஆலோசனையுடன் சேர்த்து மனநல வைத்தியரின் ஆலோசனையுடன் பிரேத்தியேகமான மாத்திரைகளையும் எடுத்துக்கொண்டால் விரைவில் நலம் பெறலாம்.

பொது மருத்துவர் ஏற்பாடு செய்து தரும் மென்டல் ஹெல்த் கேர் ப்ளான் எனும் பிரத்யேக அரசு திட்டத்தின் கீழ் வருடத்தில் 10-20 தடவைகள் medicare மூலமாகவே மனநல ஆலோசகரிடம் ஆலோசனை பெற முடியும். பணம் நம் கையிலிருந்து செலவழியும் என்று நினைக்கவேண்டாம். தற்போது மனநல மருந்துகள் அனைத்தும் பக்கவிளைவுகளற்ற அல்லது பக்க விளைவுகள் குறைவான முறையிலேயே தயாரிக்கப்படுகின்றன. தற்போது நடைமுறையில் இருக்கும் பெரும்பாலான மனநல மருந்துகள் நம்மை தூக்கத்தில் ஆழ்த்தாத மருந்துகளே. அதைப்பற்றி நீங்கள் பயப்படத்தேவையில்லை.

**கேள்வி: அண்மையில் பேர்த் நகரில் இலங்கையை சேர்ந்த ஒருவர் தனது பிள்ளைகள் இரண்டு பேரையும் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டிருந்த செய்தியை நீங்கள் படித்திருப்பீர்கள். அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் தான் மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டவர் என்றும் தான் அதற்கான மருத்து வத்தை பெற்றுவருகிறேன் என்றும் தற்கொலை எதற்கும் தீர்வில்லை என்றும் பதிவை போட்டிருந்தார். இவ்வாறு பதிவேற்றிய சுமார் ஆறு வராங்களில்தான் அவர் இவ்வாறான முடிவையெடுத்துள்ளார். மனஅழுத்தம் உள்ள ஒருவர் இவ்வாறான கொடூர செயலை செய்யக்கூடியவராக இருப்பாரா?**

பதில்: பொதுவாக அப்படி இருக்க மாட்டார்கள். இந்த குறிப்பிட்ட சம்பவத்தில் மனஅழுத்தால் பாதிக்கப்பட்டவரின் முழு தகவலும் நமக்கு தெரியவில்லை. பொதுவாக நான் மேற் சொன்ன அறிகுறிகள் தான் மனஅழுத்தத்தில் இருக்கும். மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்டவருக்கு சகிப்பு தன்மை குறையலாம். இயலாமை மற்றும் ஆற்றாமை இரண்டும் அவர்களை பீடிக்கலாம். அதனால் அவர்களுக்கு சட்டு சட்டென கோபம் வர வாய்ப்பிருக்கிறது. இச்சம்பவத்தில் அந்த நபர் எவ்வாறு மன அழுத்தத்துக்குள்ளானார் என்பது குறித்தும் அவரது குடும்ப சூழ்நிலை போன்ற பல வகையான தகவல்களை அறிந்து கொண்டால் மட்டுமே சரியான பதில் வழங்க முடியும்.

**கேள்வி: புலம்பெயர்ந்தவர்கள் மன அழுத்தத்தால் அதிகமாக பாதிக்கப்பட வாய்ப்பிருக்கின்றதா ?**

பதில்: ஆம். பொதுவாக புலம்பெயர்ந்தவர்களில் மத்தியில் மன அழுத்தம் அதிகமாக காணப்படுகிறது. அதற்கான பிரதான காரணங்களாக சிலவற்றை சொல்லலாம். சொந்த ஊர் - உறவுகள் - நன்கு பழக்கப்பட்ட சூழலை பிரிந்து வாழ்தல், நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் மனச்சோர்வை பகிர்ந்துகொள்வதற்கு தோழமைகள் சொந்த பந்தங்கள் அருகில் இல்லாதிருக்கும் நிலை போன்றவை தான் அவை. பொதுவாக இலங்கை - இந்தியா போன்ற நாடுகளில் மனநோய்கள் குறித்த விழிப்புணர்வு குறைவாக இருப்பதும் ஒரு காரணமாகலாம். மேலும் போரினால் புலம் பெயர்ந்தவர்களின் நிலை கேட்கவே வேண்டாம். போரினால், கொடுமைகளால் ஏற்பட்ட மனக் காயங்களும் அக்காயங்களை விடவும் மிக முக்கிய காரணம்.

மனச்சோர்வு - மனப்பதற்றம் - இரு முனைப் பிறழ்வு மற்றும் மனச்சிதைவு குறித்து இன்னொரு சந்திப்பில் விரிவாக பேசுவோம் என்று விடைபெற்றார் மனநல வைத்தியர் ரைஸ்.

**நேர்காணல் : நேகா**

# மகாத்மா காந்தி இல்லாத இந்தியா?

அ.முத்துக்கிருஷ்ணன்

**1948** ஜனவரி 30ஆம் தேதி பிர்லா பவனில் நடைபெறவிருந்த பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துக் கொள்ளவிருந்தார். அந்த பிரார்த்தனைக் கூட்டத்திற்கு அவர் கிளம்பி நடந்து சென்ற போது நதுராம் கோட்சே அவரை துப்பாக்கியால் சுட்டார், சுடுபட்ட காந்தி ரத்த வெள்ளத்தில் மிதந்து இறந்தார்.

காந்தியின் கொலையை விசாரிக்க தனி விசாரணை நீதிமன்றம் உருவாக்கப் பட்டது. எட்டு பேர் குற்றவாளிகள் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. காந்தியை சுட்டுக்கொன்ற நதுராம் கோட்சே மற்றும் இதனை திட்டமிட்ட நாராயண் ஆப்தே ஆகிய இருவருக்கும் தூக்குத் தண்டனை அறிவிக்கப்பட்டது.

காந்தியை எடுத்த எடுப்பிலோ முதல் முயற்சியிலோ ஆர்.எஸ்.எஸ் அமைப்பு கொன்றுவிடவில்லை. 1944 மே மாதத்தில் காந்தி கடும் மலேரியா தாக்குதலுக்கு ஆளானார், இதன் காரணமாக அவர் அகா காண் சிறையில் இருந்து மருத்துவர்களின் அறிவுறுத்தலின் பெயரில் விடுவிக்கப்பட்டார். அங்கே பஞ்சகனி மலை அடிவாரத்தில் தங்கி சிகிச்சை எடுத்து வந்தார். இந்த தகவல் அறிந்த நதுராம் கோட்சே குழுவினர் அங்கே சென்றனர். அங்கே நடந்த மாலை பிரார்த்தனைக் கூட்டத்தில் காந்தியை எதிர்க்கும் முழக்கங்களை எழுப்பிக் கொண்டு உள்ளே நுழைந்தனர். அன்று பெரும் கூட்டம் இருந்ததால், அவர்களால் காந்தியை நெருங்க முடியவில்லை. காந்தியின் தொண்டர்கள் காந்தியை பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

1944 செப்டம்பர் மாதம் காந்தி சேவாகிராம் ஆசிரமத்தில் இருந்து மும்பைக்குப் பயணமானார், அவரை இந்தப் பயணத்தில் இந்து மகாசபா குழுவினர் வழிமறித்தனர், அவருடன் கடுமையாக வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். நதுராம் கோட்சே காந்தியைக் கொலை செய்ய முயன்றார். இந்தச் சூழலை அறிந்தவர்கள் உடன் காந்தியை பாதுகாத்தனர். நான் சாவர்க்கரின் கட்டளைப்படி காந்தியைக் கொல்ல வந்துள்ளேன் என்று அன்று நதுராம் உரக்க முழக்கம் எழுப்பியிருக்கிறார், இந்தச் சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட டாக்டர் சுசிலா நாயர் கப்பூர் ஆணையத்தில் முழு விபரங்களும் பதிவு செய்யப்பட்டது.

1946 ஜீன் மாதம் காந்தி ரயிலில் பயணித்துக் கொண்டிருந்தார். முப்பைக்கு அருகே கர்ஜட் அருகில் ரயில் தடம்புரண்டது. ரயில் தண்டவாளத்தின் கடையாணிகளை யாரோ கழற்றியிருந்ததாக விசாரணையில் தெரிய வந்தது.

1948 ஜனவரி 20 ஆம் தேதி மதன்லால் பக்வா, சங்கர் கிஸ்தயா, திகம்பர் பட்கே, விஷ்ணு கார்கேர், கோபால் கோட்சே, நாதுராம் கோட்சே மற்றும் நாராயண் அப்தே இவர்கள் அனைவரும் தில்லியில் பிர்லா பவனில் கூடி அடுத்தக்கட்டத் தாக்குதலைத் தீர்மானித்தனர். காந்தி பிரார்த்தனை கூட்டத்தில் பேசும் போது அவரது மேடை அருகே ஒரு வெடி குண்டை வெடிக்கச் செய்து ஒரு கலவரத்தை ஏற்படுத்த வேண்டும், அந்த நேரம் பார்த்து காந்தியைச் சுட்டுக்கொல்ல வேண்டும் என்று தீர்மானித்தனர். முழுமையான திட்டமிடலுடன் அன்று அனைவரும் களத்தில் இறங்கினர். காந்தி பேசும் மேடை அருகே, மதன்லால் பக்வாவால் வெடிகுண்டு பற்றவைக்கப்பட்டது, ஆனால் எதிர்பாராதவிதமாக குண்டு வெடிக்கவில்லை. காவல்துறையினர் உடனடியாக மதன்லால் பக்வாவை கைது செய்து விசாரித்தனர்.

காந்தியை கொலை செய்ய தொடர்ந்து சதிகள் தீட்டப்பட்டு வருகிறது என்பதை அறிந்த சர்தார் வல்லபாய் பட்டேல், "ஆர்.எஸ்.எஸ் அல்லது வேறு வகுப்புவாத அமைப்பு, நாட்டை பின்தள்ளிவிட அனுமதிக்க மாட்டோம். நான் ஒரு படை வீரன், பிளவு சக்திகளுக்கு எதிராகப் போராடுவேன். அந்தக் காரியத்தை செய்வது என் சொந்த மகனாக இருந்தாலும் அவனை விடமாட்டேன்." என்று வெளிப்படையாகப் பேசினார்.

காந்தியை எப்படியாவது கொலை செய்து விட வேண்டும் என்பதுவே சாவர்கரின் கட்டளை, இந்தக் கட்டளையை நிறைவேற்ற வெறியூட்டப்பட்ட இந்தியாவின் முதல் தீவிரவாதிகள் எத்தனை தோல்விகள் வந்தாலும் மீண்டும் மீண்டும் முழு முனைப்புடன் களத்திற்குச் சென்றனர்.

புதுதில்லியின் பிர்லா இல்லத்திலிருந்து 30 ஜனவரி 1948 அன்று காந்தியடிகள் மாலையில் கூட்டுப் பிரார்த்தனைக்குச் சென்று கொண்டிருந்த போது, நாதுராம் கோட்சே கைத்துப்பாக்கியால் காந்தியடிகளை மாலை 5.12 மணியளவில் சுட்டுக் கொன்றார்.

வெள்ளிக்கிழமையன்று நல்ல செய்தி வரும், எனவே ரேடியோவை தொடர்ந்து கேட்கவும் என்று ஆர்எஸ்எஸ் உறுப்பினர்களுக்கு அமைப்பின் தலைமையில் இருந்து செய்தி வந்திருந்தது. காந்தி கொல்லப்பட்ட செய்தி வெளியானதும், ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர்கள் பல இடங்களில் இனிப்புகளை விநியோகித்துக் கொண்டாடினார்கள். 'காந்தி கொலை செய்யப்பட்ட தகவல் கொண்ட துண்டுப்பிரசுரங்கள் மாலை மூன்று மணிக்கே அல்வரில் அச்சடிக்கப் பட்டு தயாராக இருந்தது. ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் ஆர்கனைசர் பத்திரிகை காந்தியைக் கொன்றதன் நியாயங்களை இன்றளவும் கட்டுரைகளாக வெளியிட்டு வருகிறது.

காந்தியின் இறுதிச் சடங்குகள் முடிந்த பிறகு 1948 ஜனவரி 31 ம் தேதி கூடிய மத்திய அமைச்சரவைக் கூட்டத்தில் ஆர்.எஸ்.எஸ் மற்றும் இந்து மகாசபையைத் தடை செய்யும் முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால் இந்தத் தடை 1949 ஜூலை வரை மட்டுமே நீடித்தது, இது அன்றைய காலகட்டதிலேயே இந்துத்துவர்கள் காங்கிரசிற்குள் ஊடுருவியிருந்தார்கள் என்பதை நமக்கு சுட்டிக்காட்டுகிறது.

காந்தியைக் கொலை செய்தவரை, காந்தியின் கொலையைத் திட்டமிட்டவர்களை வருடா வருடம் கௌரவிக்கிறார்கள், கொண்டாடுகிறார்கள். 2020ல் காந்தி பிறந்த குஜராத்தில் காந்தியின் சிலை உடைக்கப்படுகிறது. தேர்தல் பிரச்சாரங்களில் பிரக்யா தாக்கூர் தொடர்ந்து கோட்சேயை தேசபக்தர் என்று அழைக்கிறார். 2019ல் ஆக்ராவில் இந்து மகா சபாவின் புஜா ஷகுன் காந்தியின் உருவத்தை தன் துப்பாக்கியால் சுடுகிறார், அவர் சுட்டதும் காந்தியின் உருவத்தில் இருந்து ரத்தம் வழிந்தோடும் படியாக ஏற்பாடு செய்து வைத்திருக்கிறார்கள். அனைவரும் கோட்சே வாழ்க, சாவர்கர் வாழ்க முழக்கங்களை எழுப்பி மகிழ்கிறார்கள். இப்படியான செயல்களில் ஈடுபடும் அனைவரையும் இந்த சித்தாந்தமும் அதன் அமைப்புகளும் கொண்டாடுகின்றன. இவர்களுக்கு எல்லாம் வெகுமதியாக நாடாளுமன்ற உறுப்பினர், மத்திய அமைச்சர் பதவிகள் காத்து நிற்கிறது.



காந்தியுடன் காங்கிரஸ்/க்கு முரண்கள் இருந்தன, காந்தியுடன் அம்பேத்கருக்கு முரண்கள் இருந்தன, காந்தியுடன் திராவிட இயக்கத்துக்கு முரண்கள் இருந்தன, காந்தியுடன் இடதுசாரிகளுக்கு முரண்கள் இருந்தன, காந்தியுடன் இஸ்லாமியர்களுக்கு முரண்கள் இருந்தன, காந்தியுடன் இந்த தேசத்தில் வேறு பலருக்கும் கூட முரண்கள் இருந்தன, ஆனாலும் காந்தி உயிர்வாழக்கூடாது என்று யாரும் நினைக்கவில்லை! இந்துவாகப் பிறந்து, இந்துவாக வாழ்ந்து, இந்து மதப் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட காந்தியை இந்துத்துவ பயங்கரவாதிகள் படுகொலை செய்தார்கள்.

காந்தியை ஏன் கொலை செய்தோம் என நதுராம் கோட்ஸேயின் சகோதரர் கோபால் கோட்ஸே புத்தகமே எழுதி வெளியிட்டார். நதுராம் கோட்சே ஒரு ஆர்.எஸ்.எஸ் உறுப்பினர், ஆர்.எஸ்.எஸ் அமைப்பும் அதன் சித்தாந்தமும் எப்பொழுதும் காந்தியை, இந்தியத் தேசியக் கொடியை, இந்தியா எனும் தேசத்தை ஏற்காதவர்கள். பிரிட்டிசாரிடம் தொடர்ந்து மன்னிப்புக் கடிதங்கள் கொடுத்து அவர்களுக்கு சேவகம் புரிந்தவர்கள் இன்று இந்த தேசத்தின் விடுதலைக்காகப் போராடியவர்களுக்கு தேசபக்தி பாடம் எடுத்து வருகிறார்கள். பிரதமர் மோடி தான் செல்லும் நாடுகளில் எல்லாம் காந்தியின் புகழைப் பரப்புவது போல் பாவனை செய்கிறார், ஆனால் இந்தியாவில் காந்தியைப் படுகொலை செய்த நதுராம் கோட்சேயின் அஸ்தியை பாதுகாப்பாக வைத்து அதனை வழிபட்டு வருகிறார்கள்.

காந்தி அகிம்சையை மதச்சார்பின்மையை தொடர்ந்து வலியுறுத்தியவர். ஆனால் இன்று இந்தியாவில் அகிம்சை வழியில் சத்தியாகிரக வழியில் போராடுகிறவர்கள் அனைவரையும் துளியும் மதிப்பதில்லை மோடி அரசு. ஜே.என்.யூ, ஜாமியா மாணவர்கள் முதல் ஒரு வருடமாக போராடிய விவசாயிகள் வரை அகிம்சை வழியைப் பின்பற்றுகிறவர்களை பாஜக அரசுகள் மதிப்பதேயில்லை. அவர்களை நோக்கி காவல்துறையை, துணை ராணுவப்படைகளை, இயன்ற இடங்களில் எல்லாம் குண்டர்களை, ரவுடிகளை, ஆயுதம் ஏந்திய சங்கப் பரிவாரை சேர்ந்தவர்களை அனுப்புவதையே இவர்கள் வழக்கமாக வைத்திருக்கிறார்கள்.

இந்த வருடம் காந்தி கொலை செய்யப்பட்ட ஜனவரி 30 அன்று தமிழக முதல்வர் ஸ்டாலின், "கோட்சேவின் வாரிசுகளுக்கும் அவர்களது தீய எண்ணங்களுக்கும் நம் இந்திய மண்ணில் இடமில்லை எனச் சூளுரைப்போம்!" என்று தனது ட்விட்டர் பக்கத்தில் பதிவிட்டார். கேரள முதல்வர் பினரயி விஜயன் . "இந்தியாவின் அரசியல் அமைப்பை ஜனநாயகத்தைத் தூக்கி பிடிப்போம், இதனை அழிக்கத் துடிப்பவர்களை ஒன்றிணைந்து தகர்ப்பது நம் கடமை" என்றார். மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி அவர்களும் 'அரசியல் அமைப்பை உயர்த்திப் பிடிப்போம், ஜனநாயகம் காப்போம்" என அறிவித்திருந்தார். இந்த ஆண்டு குடியரசுத் தினத்தின் அணிவகுப்பில் இந்த மூன்று மாநிலங்களின் ஊர்திகளுக்கும் அனுமதி மறுக்கப்பட்டது என்பதையும் இணைத்துப் பார்க்க வேண்டும்.

காந்தியின் பிரியத்திற்குரிய ராமர் இன்று ஒரு கலவரக்காரராக மாற்றப் பட்டிருக்கிறார், காந்தி உச்சரித்த ஜெய் ஸ்ரீராம் இன்று கொலைகாரர்களின் முழுக்கமாக மாற்றப்பட்டுள்ளது.

காந்தி இன்று உயிருடன் இருந்திருந்தால் நிச்சயம் இன்றைய விவசாயப் போராட்டத்தில் அவர்களுடன் அமர்ந்திருப்பார், நிச்சயம் இந்தியாவில் நடக்கும் எல்லா அறவழி அமைதிப் போராட்டங்களிலும் பங்கு கொண்டிருந்திருப்பார். மேதா பட்கருடன் நர்மதா அணையில் இருந்திருப்பார், இடிந்தகரை போராட்ட மேடையில் மக்களுடன் உண்ணாவிரதம் இருந்திருப்பார், ஜே.என்.யூ மாணவர்கள் மத்தியில் உரையாற்றியிருப்பார், பசுவின் பெயரால் நடைபெறும் கொலைகளைக் கண்டித்திருப்பார், என்.ஆர்.சி- சி.ஏ.ஏ போராட்டத்திற்கு ஆதரவாக ஷாகின் பாக்கில் உண்ணாவிரதத்தில் பங்கு கொண்டிருப்பார், அக்லாக்கின் வீட்டில் இருந்தது ஆட்டிறைச்சி தான் என்பதை கேள்விப்பட்டதும் உபி அரசின் முகத்தில் காறியுமிழ்ந்திருப்பார். காந்தி இன்று நம்முடன் இருந்தால் அவர் ஒரு மாவோயிஸ்ட்டாக, அர்பன் நக்சலாக, இந்துத்துவ வெறியாளர்களாக அழைக்கப்பட்டிருப்பார்.


IMMIGRATION LAW ACCREDITED SPECIALIST
PARISH PATIENCE
IMMIGRATION LAWYERS
FOUNDED 1888
MIA
Migration Institute of Australia
Our large legal team provides a full range of specialist immigration legal services no matter where you are in the world at competitive rates
Michael T. Jones
Legal Practice Manager
Accredited Specialist in Migration Law
MARN: 9255530
Email: MTJONES@ppilaw.com.au
Mahalingam (Shan) Sutharshan
LL.B (Col), LL.M (Monash), LL.M (ANU).
Director
MARN: 0961664
Email: SHAN@ppilaw.com.au
Prasad Pahalawela
Solicitor & Migration Agent
MARN: 12800846
Email: PRASADP@ppilaw.com.au
Ashwina Krishnan
Solicitor & Migration Agent
MARN: 1913008
Email: ASHWINAK@ppilaw.com.au
Non - Immigration Matters
Family Law & Divorce Application
Criminal Law
Traffic Offences
Commercial & Business Law
Our professional provide expert assisstance with:
Business & Investment Visas SC188, 888, and 132
Student SC500 and Student Dependent Visa
SC485 (TR) and SC485 Dependent Visa
General Skilled Migration (GSM) SC189, 190 and 489 Visa
Skilled Assessment, SkillSelect, EOI
State Sponsorship and Nomination
ENS (SC186), RSMS (SC187) and TSS (SC482)
Refugee & Asylum Seekers SC866
Temporary Protection Visa SC785
Safe Haven Enterprise Visa (SHEV) SC790
Family, Partner, Child, Parent, and Carer Visa
Visitor SC600 and Working Holiday Visa
Distinguished Talent Visa
Citizenship and Resident Return Visa
Administrative Appeal Tribunal (AAT)
Federal Circuit Court, Federal Court & High Court
Visa Cancellation, Detention and Deportation
Health, Character & Identity Issues (PIC4020)
All other visas and Immigration matters
Commercial and Property matters
Lawyers and Registered Migration Agents: T. Nguyen: Director & MARN: 0322836 | A. Dougall Lawyer & MARN: 1684660 | A Shah MARN: 1801710 | A Charif: MARN: 1803234
Parish Patience Immigration Lawyers | Level 3, 83 York Street Sydney NSW 2000 | Tel: +61 02 9286 8700 | E: PPMAIL@ppilaw.com.au | W: www.parishpatience.com.au


Cultural Entertainment Group
CULTURAL ENTERTAINMENT GROUP - BRISBANE
PROUDLY PRESENTS
QPASTT
FUNDRAISING EVENTS
SANJANA'S
Live Concert
Artist : Sanjana Kalmanje
Sydney Geetha Saagara Music Group
Venkat
Chitra
Dr. Rajayogan
Abi
Mr Aravamudhan
Sri Jay
0432 168 310
Vijekumar - 0408 062 641 | Sutha - 0402 738 280
Genam - 0481 347 809
TICKET
VIP TICKET
$100
LIMITED SEATS
EARLY BIRD
$30
Until 15th March 2022
REGULAR
$35
After 15th March 2022
APRIL 16 2022
Venue: 210 Dunn Road Rocklea, QLD - 4106. | culturalentgroup@gmail.com
Media Support
INDIA NEWS KEEPING YOU AHEAD
எதிரொலி
Supporters
MULTICULTURAL AUSTRALIA
ECCQ
BRISBANE SUPER KINGS


CEYLON EXPRESS
MONEY TRANSFER
Best Rates Guarantee
Same Day Bank Transfer
Responsible Customer Support
Easy, Quick Internet Money Transfer
127, Walker st, Dandenong
CONTACT : OSMAN 0402 396 052

எதிரொலி ஆஸ்திரேலியா ETHIROLI



ஊழிக்காலம்-2

30



# புயலுக்குப்பின்...

அன்றிரவு வழங்கல் வாகனம் வந்தது. இரண்டு முகாம்களுக்குமான உணவுப் பொருட்களை அலுவலகத்தின் முன் வீதியில் வைத்துப் பிரித்துக் கொடுப்பார்கள். அந்தந்த முகாம்களில் அடுத்தடுத்த நாட்களில் சமைக்கவிருக்கும் குழு பொருட்களை தூக்கிச் செல்ல வேண்டும்.

பார்வதி தனது குழுவினரைக்கூட்டிக் கொண்டு வீதிக்கு வந்தபோது,ஜெயாவும் அவள்தோழியும் வீதியில் நின்று பொருட்களை பார்வையிட்டுக் கொண்டிருந்த இரண்டு இராணுவத்தினருடன் பேசிக் கொண்டிருந்தனர்.

‘இவர்கள் எப்போது முகாமிலிருந்து வந்தார்கள்?’ பார்வதிக்கு விளங்கவில்லை. எனினும் அதைக் கவனிக்காதவள்போல, அவர்களுக்குரிய மீனை எடுத்துச்செல்ல இரு பிள்ளைகளிடம் கூறினாள். மரக்கறி மூடைகள் உருளைக்கிழங்கு மூடைகள், வெண்காயம் தேங்காய் மூடைகள். கீரைவகைகள் என இரண்டு நாட்களுக்குரிய பொருட்களை ஏனைய பிள்ளைகள் முகாமுக்கு கொண்டு சென்றார்கள். அதன்பின் கோழிஇறைச்சியையும்,சிறு மீன் மூடைகளையும் குளிர்பதனப் பெட்டிக்கு அனுப்பிய பின் பொருட்களை இறக்கிய இடத்தை கூட்டிதுப்பரவு செய்ய விளக்குமாற்றை எடுத்துவர பார்வதி புறப்பட்டாள்.

இப்போது காவலில் நின்ற பெண் சிப்பாய் பார்வதியிடம்,

“அம்மா! பீ புளொக்கிற்கு ரெண்டு பேர் போனாங்க இப்ப வருவாங்களா? நான் கதவு மூட வேணும்.” என்றாள்.

“அப்படியா பொறுங்க நான் விளக்குமாறு கொண்டுவந்த பிறகு பாப்பம்” என்று அவள் சொல்வதற்குள்,ஒரு பிள்ளை விளக்குமாற்றைக் கொண்டு வந்தாள்.

பார்வதி அவளிடம் “ஒருக்கா கூட்டம்மா நான் ஒருக்கா முகாமைப் பாத்திட்டு வாறன்” என்றவாறே அவள் முகாமுக்குப்போக வேலை செய்த பிள்ளைகள் அனைவரும் நின்றனர். ‘அப்ப யார் போனது?’ என்று சிந்தித்தவாறே வீதிக்கு வர அங்கே ஜெயாவும் சாந்தியும் வீதியைக் கூட்டித்துப்பரவு செய்துகொண்டு நின்றார்கள். இவர்கள் எப்போது காணாமல் போனார்கள். எப்போது திரும்பி வந்தார்கள்? சம்திங்ரோங். பார்வதி பரபரப்பானாள். அதை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை.

அவள் இந்த முகாமுக்கு வந்து மூன்று தினங்களாகிவிட்டன. காலையில் அன்றைய சமையலுக்கான குழுத்தலைவி வந்தாள்.

“மம்மீ எங்கட குழுவில ஜெயா எந்த வேலைக்கும் வாறதில்லை” என்றாள். அவள் அதை சொல்லிக் கொண்டிருக்கும்போதே முகாம் பொறுப்பதிகாரி வந்தான் “என்ன சொல்லுறா” என்று பார்வதியைக் கேட்டான். தமிழ் புரியாத நிலையில் அவள் பேசுவதை தெரிந்து கொள்ளவே அவன் விரும்பினான். அவள் எப்படி மறைக்க முடியும்? அவள் சொன்னதை சிங்களத்தில் சொன்னாள்.

அவர் ஜெயாவை அழைப்பித்தார். “ஏன் எந்த வேலைக்கும் போகவில்லை?’

“சேர் எனக்கு கையில காயம் பட்டிருக்கு என்னால் எந்த வேலையும் செய்ய முடியாது. அதுதான் நான் வாறதில்லை.”என் சிங்களத்திலேயே கூறினாள்.

“குறைந்தபட்சம் வெங்காயம் கூடவா உரிக்க முடியாது. மரக்கறி வெட்ட முடியாதா? அதுவுமில்லாட்டி நீ உற்சாகமா பேசிக் கொண்டிருக்கலாமே குழுவோட சேந்திரு” என்றார்.

அன்று மாலை குளிர்பதனப் பெட்டியிலிருந்து கோழிகளை எடுக்கச் சென்றனர். அவற்றை எடுத்துக் கொண்டு பிள்ளைகள் போனபின் எதையோ நினைத்தவளாக பார்வதி திரும்பி வந்தாள். சாந்தி குளிர்பதனப் பெட்டியுள் எதையோ சுரண்டிக் கொண்டிருந்தாள். அருகே சிறு பாடசாலை மேசையுடன் கோப்புகளை பார்த்தபடி ஒரு கோப்ரல் உட்கார்ந்திருந்தான்.

நேரம் இரவு எட்டு மணிக்கு மேலாகியிருந்தது. எனவே போன போக்கிலேயே “சாந்தி இங்க தனிய என்ன செய்து கொண்டிருக்கிறாய்?” என்று அதட்டினாள் பார்வதி.

“தனிய இல்லை ஜெயா நிக்கிறா வெளியில தண்ணி ஊத்தப்போயிருக்கிறா” என்றாள். அதேவேளை அந்த சிப்பாய், “தனிய இல்லை மூணுபேர் நிக்கிறமென்று சொல்லுங்க” என அவளிடம் மெதுவாக சொன்னதும் பார்வதியின் காதில் அறைவது போல் கேட்டது. குடிலில் வெளிச்சம் இருந்தது. வெளியே இருளில் பார்வதி நின்றாள். அதை அவன் அறியவில்லை. வெளியே நின்று “ஜெயா- ஜெயா” என அழைத்தாள் பார்வதி. அவள் பதில் பேசாமலே இருளில் மிகத் தொலைவிலிருந்து வருவது தெரிந்தது.

“மூண்டு ரெண்டு பேர் பிரச்சனையில்லை. கேஸ் எண்டு வந்தா நானும் சாட்சி சொல்ல அலையவேணுமே. அது எனக்கு விருப்பமில்லை, சரி வாங்க போக” என அவர்களைத் தள்ளாத குறையாக முகாமுக்கு கொண்டு வந்தாள்.

‘கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய், தீர விசாரித்து அறிவதே மெய்.’ நன்கு பழகிப்பார்க்காமல் எடுக்கும் எத்தனையோ முடிவுகள் பிழையாகி விடுவதுண்டு. இங்கே முன் பகுதியில் அவன் இவன் என விளிக்கப்பட்ட முகாம் பொறுப்பதிகாரி மேஜர் நவரட்ணவை இபபோது பிள்ளைகள் மதிக்கத் தொடங்கியிருந்தனர். காரணம் அவருடைய நிர்வாகத்திறமையும், பிள்ளைகளுடன் சமமாகப்பேசியே அவர்களின் மனங்களை வென்றதும், தனித்தனி ஒவ்வொரு விடயத்தையும் முன்நின்று தானே கவனித்து செய்ததும் மனிதாபிமான செயல்களுமாக பார்வதியின் மனதில் அவரை மெல்லமெல்ல கோபுரத்தில் ஏற்றத் தொடங்கியிருந்தன. அவள் மட்டுமல்ல அவர்களிடையே மறை பொருளாகவிருந்த பல அதிகாரிமட்டத்திலிருந்த பிள்ளைகளும் வாய்விட்டுப் பாராட்டினார்கள்.

இன்று காலையில் அணிகளை ஒழுங்கு படுத்தி ‘ரோல்கோலிங்’ எனப்படும் டாப்பு கூப்பிடும் படலம் முடிந்ததும். அவரவர் அணிக்கு நேராக இலக்கத்தகடுகளைக் கட்டுங்கள் இனி அந்தந்த தகடுகளுக்கு நேராக அந்தந்த அணி நிற்க வேண்டும்.” என்றார்.

பார்வதி அங்கு தலைமைப் பொறுப்பை ஏற்றபின். பழைய தலைவிகளிடமும் வேறுசிலரிடமிருந்தும் சிறிதளவு எதிர்ப்பைப் பெற்றாள். ஆரம்பத்தில் சீனி, தேயிலை, பால்மா, எனபவற்றை பகிர்ந்து கொடுத்தது அவர்கள்தான் எனவே இப்போதும் அப்பொறுப்பை அவர்களிடமே விட்டாள். ஆனால் ஜெயா சீனி மூடைகளை வெய்யிலில் போட்டுவிட்டு வழமை போல எங்கோ போய்விட்டாள். கூடவே அலையும் சாந்தியை அதைப் பகிரும்படி கூறினாள் பார்வதி.

“அதெப்படி ஜெயா இல்லாமல் நான் செய்வது” என்றாள் சாந்தி.

பார்வதி உடனேயே கலையையும் உமாவையும் அழைத்து, அதைப்பகிர்ந்து கொடுக்கும்படி கூறினாள். அவர்கள் மகிழ்ச்சியோடு செய்தார்கள். சுமார் அரை மணி நேரத்துக்குள் அனைத்தும் முடிந்தது.

நேற்றைய சம்பவமும், இன்றைய சம்பவமும் இரவு வீதியில் நடந்த சம்பவமும் பார்வதியின் மனதுள் சட்டம் போட்டு அமர்ந்தன. அவர்களை எதிர்பார்க்காமலே வேலைகள் நடந்தது அவர்களுக்கும் பிடிக்கவில்லை.

சமையலறையில் பாத்திரங்களுக்கு தட்டுப்பாடு நிலவியது. எனவே அதுபற்றி ஒரு தகவலை அலுவலகத்துக்கு பார்வதி கொடுத்தாள். அகப்பைகூட இல்லை. மிளகாய்த்தூள் வழங்கப்படுவதில்லை. மிளகாய் மல்லி சீரகம் வெந்தயம் மிளகு போன்றன பொருட்களாகவே வரும். அதை இடிப்பதற்கு உரல் இல்லை.

பீ புளொக்கில் இருந்தபோது வேலிக் கரையில் அரிந்து போட்டிருந்த ஒரு முதிரைக்குற்றியைக் கொண்டு வந்து நெருப்புப்போட்டுப் போட்டே சிறு உரலாகச் செய்திருந்தாள் பார்வதி. அதற்காக அவளைக்கேலி செய்யாத பெண்களே இல்லை. இப்போது அந்த உரல் மிளகாய்த் தூள் இடிப்பதற்காக காலையில் இந்தமுகாம் மாலையில் அந்தமுகாமென்று அலைந்தது.

அன்று மத்தியானமளவில்,பெரிய சமையல் அண்டாக்கள் புதிதாக வந்தன. பார்வதி நான்கு அண்டாக்களை மூடியுடன் எடுத்தாள். இரண்டு தாச்சி, இரண்டு பெரிய கத்தி, இரண்டு புளொக்குகளுக்குமாக சம அளவில் பிரித்து வைக்கப்பட்டது. பார்வதி தமக்குரியவற்றை எடுத்துக்கொண்டு படிவத்தில் ஒப்பமிட்டாள். அவற்றுள் ஒன்றை கோவிலுக்கும், ஒன்றை தேநீருக்கும் கொடுத்தாள்.

“இனி இரண்டு வேளையும் தேநீரை பொதுவாக வைப்போம். அனைவரும் அணிகளாகவோ தனியாகவோ வந்து பெற்றுக் கொள்ளலாம்” என்று கூறியதுடன், தேநீர்வைக்கும் அணிகளையும் ஒழுங்கு செய்தாள்.

அது நடந்த சில நிமிடங்களின் பின் எதையோ எடுப்பதற்காக இன்னுமொரு பெண்ணையும் அழைத்துக் கொண்டு களஞ்சியப்பகுதிக்குப் போனாள். அங்கே அவள் கண்ட காட்சி அதிர்ச்சி தருவதாக இருந்தது. பார்வதியுடன் வந்த பெண் ‘ச்சீ நாயள். இதுகளாலதான் எங்களுக்கும் நாசம்’ எனறவாறே அப்பால் போனாள். பார்வதி இனிமேலும் இதை அதிகாரிக்கு மறைக்கக் கூடாது என்ற முடிவுக்கு வந்தாள். என்றாலும் பீ புளொக்கின் தற்போதைய தலைவியான ரோசாவுடனும் பேச முடிவு செய்தாள். அவளும் அதை அறிவிப்பதே சரியென கூறினாள்.

அன்று மாலை அணிக்கணக்கெடுப்பு முடிந்ததும் தாம் கண்ட காட்சியை அதிகாரியிடம் ரோசியுடன் சென்று தனியாக சொன்னாள். ஆயினும் யாருடைய பெயரையும் கூறவில்லை. அவரும் பெயரைக் கேட்கவில்லை. “சரிசரி கவனிக்கிறன்” என்றவாறே நகர்ந்தார். பார்வதி ஏதாவது வழிகிடைத்தால் சரிதான் என எண்ணிக் கொண்டாள்.

“எப்படியோ அம்மா நீங்க பெரிய எதிர்ப்பை சந்திக்க நேரிடும்” என்றாள் ரோசா. பார்வதி அவளைத் திரும்பிப் பார்த்தாள்.

“சேரோட கூட நிண்ட சார்ஜன் எல்லாத்தையுங் கேட்டுக்கொண்டு நிண்டவன். அவன் தங்கட ஆக்கள அலேட் பண்ணிருவான்” என்றாள். உண்மைதான் மறுநாள் அவர்கள் உசாரடைந்து விட்டனர். ஆனால் பெண்களுக்கு இது தெரியாமற்போகவே அவர்கள் அடிக்கடி களஞ்சியப்பகுதியை வட்டமிட்டனர்.

அன்று மத்தியானமளவில் கிச்சன் பாத்திரங்களைப் பார்க்க வேண்டும் என்றபடி சார்ஜனும் இரு பெண் ராணுவத்தினரும் வந்தனர். பார்வதி அவ்விடத்துக்குப் போகுமுன்பே ஜெயா அங்கு சென்று விட்டாள்.

பார்வதி, “பிள்ளையள் கிடக்கிற ஓட்டைப்பாத்திரங்களைக் கொண்டு வந்து போடுங்கோ” என்றாள்.

“எல்லாம் இருபத்திரண்டு சட்டி” என்றான் சார்ஜன்.

பார்வதிக்கு அதிர்ச்சியாகவிருந்தது. “என்னட்ட புதுசா வந்த அஞ்சு சட்டியத்தவிர இதுதான் இருக்கு வேற எதுகும் தரயில்லை எனக்கு” என்றாள்

“இல்லையில்லை எல்லாம் வீடு வீடாப்போயிற்றுது செக் பண்ணி எடுங்க “ என்றான்.

“ அப்பிடி வீடு வீடாப் போயிற்றுது எண்டா பழைய லீடரோட கதைச்சு எடுங்க” என்றாள் பார்வதியும் விடாப்பிடியாக.

உடனேயே ஜெயாவையும் கூட வந்த பெண் சிப்பாய்களையும் அழைத்துக் கொண்டு வீடு வீடாக இறங்கினான் அவன். பார்வதியும் பின்னாலேயே போனாள்.

ஏதோ கொடுத்து வைத்ததை எடுப்பது போல ஜெயா குறிப்பாக சில வீடுகளில் இறங்கி பெரிய சட்டி மூடிகள் தாச்சி என சில பாத்திரங்களைப் பொறுக்கினாள். இப்போது பார்வதியை வரும்படி யாரோ அழைக்க, அவள் திரும்பி தன் குடிசைக்குச் சென்றாள். ஜெயாவின் அயல் வீடுகளில் சுமார் ஒருமூடை அரிசி வேகக்கூடிய பாத்திரங்கள் இரண்டு மூடிகளுடன் கைப்பற்றப்பட்டிருந்தன. இவை மேலதிகமாக நீர் சேர்த்து வைப்பதற்காக ஒளித்து வைத்திருந்தார்கள் என தெரிய வந்தது. அந்த வீடுகளைக் காட்டு என பார்வதி ஜெயாவைக் கேட்க அவள்,

“ உங்களுக்கு பாத்திரம் வந்தா சரிதானே பிறகேன் வீடுகளை” என்று விட்டாள். சார்ஜனும் எதுவும் பேசவில்லை.

பார்வதி விடவில்லை “ஒரு பழுதும் இல்லாத பாத்திரங்களை ஏன் மறைத்து வைத்தீர்கள் இதெல்லாம் தாங்க குசினிக்கு” என்றாள்.

“தரமாட்டம். கொண்டே ஓட்டைப் பாத்திரங்களோட போடுங்க இவள நாள் விட்ட நீங்தானே இனிம் விடுங்க” என்றான் சார்ஜன்.

“அதெப்படி விடுறது. இதெல்லாம் இருக்கெண்டு யாருக்குத்தெரியும். நீங்க தானே குடுத்தீங்க நீங்களே எடுக்கிறீங்க, இதுக்கு நான் பொறுப்பில்ல, தரமாட்டமெண்டா மாட்டம்.” பார்வதியின் வழமையான தொண்டை கோபத்தில் இன்னும் உயர்ந்தது.

“அதுக்கு ஏன் கத்திறீங்க” என்றாள் ராணுவப்பெண்.

“அவங்க சொல்லுற கதைக்கு கத்தாம என்ன செய்யிறது” என்றாள் பார்வதி.

“பாத்திரம் தரமாட்டம்” என்றான் சார்ஜன்.

“சரி விடுங்க நான் சேரோட கதைக்கிறன்” என்று முடித்தாள் பார்வதி. அந்த பெண் சிப்பாய் ஜெயாவுக்கு சார்பாக பேசினாள். பார்வதிக்கு அது இன்னும் கோபத்தை ஏற்படுத்தியது.

“ ஸ்றொப், நீங்க இதில ஏன் கதைக்க வாறீங்க. உங்களுக்கு இதில கதையில்ல” என்று அவளை அடக்கினாள். அவர்கள் போய்விட்டனர். பார்வதி தனது வேலைகளில் ஈடுபட்டாள். இவையனைத்தையும் முன்புறம் காட்டின் மறைவில் அமைக்கப்பட்டிருந்த அலுவலகத்தில் இருந்தவாறே மேலதிகாரி பார்த்துக் கொண்டிருந்தார் என்பதை யாரும் அறியவில்லை.

பழைய தலைவிகள் இருவரையும் சார்ஜனையும் அழைத்த அந்த அதிகாரி சரிவர விசாரித்து அவர்களை கண்டித்ததுடன் பாத்திரங்களையும் பார்வதி கேட்டபடி அவர்களுடைய பிரிவிற்கே வழங்கிவிட்டார். இது சார்பாக சார்ஜன் பார்வதியை சமாதானப்படுத்த வேண்டியதாகப்போயிற்று. அவனுடைய அடிமனதில் இது ஒரு தழும்பாக விழுந்தது.

இந்த சம்பவங்களின் பின் குசினிக்கு தரும் பொருட்களில் குறைபாடு நிலவியது அடிக்கடி களஞ்சியத்திற்குப் போகவேண்டியிருந்தது. பொருட்களை தருவதில் பெரிய இழுபறி நடந்தது.

# மாத ராசிபலன்



## மேடம்

புத்தி சாதுரியத்தால் புகழையும், செல்வத்தையும் பெறும் மேஷ ராசிக்காரர்களே, இந்த மாதம் எண்ணிய காரியங்களை திறமையாக செய்து முடிப்பீர்கள். பணவரவு இருக்கும். தொழில், வியாபாரம் செய்பவர்கள் தங்களது திறமையை வெளிபடுத்தி வியாபாரம் செய்ய வேண்டி இருக்கும். கலைத்துறை யினருக்கு காரணமில்லாமல் மனதில் தைரியம் குறையும். பண வரவுக்குக் குறைவு ஏற்படாது. அரசியல்துறை யினருக்கு மனகவலை குறையும். எல்லா வகையிலும் சாதகமான பலன் கிடைக்க பெறுவீர்கள். இந்த மாதம் மாணவர்களுக்கு கல்வியில் திறமை வெளிப்படும். கல்வியில் வெற்றி பெற தேவையான உதவிகள் கிடைக்கும்.

## இடபம்

சொன்ன சொல்லை காப்பாற்றும் குணமுடைய ரிஷப ராசியினரே இந்த மாதம் தைரியமாக எதையும் செய்ய தோன்றும். உங்களது செயல்களால் உங்களுக்கு மற்றவர்களிடம் இருந்து பாராட்டு கிடைக்கும். கணவன், மனைவிக் கிடையே நெருக்கம் அதிகரிக்கும். வாழ்க்கை துணையின் மூலம் ஆதாயம் உண்டாகும். குடும்பத்துடன் புண்ணிய ஸ்தலங்களுக்கு செல்வீர்கள். அரசியல்துறையினருக்கு வேலைகள் உடனே முடியாமல் இழுபறியாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தடங்கல் இன்றி நன்றாக படிப்பீர்கள்.

## மிதுனம்

எளிதில் யாருடனும் நண்பராகும் திறமை பெற்ற மிதுன ராசியினரே இந்த மாதம் நீண்ட நாட்களாக இருந்து வந்த வீண் மனக்கவலை நீங்கும். எந்த ஒரு காரியத்திலும் எதிர்பார்த்த வெற்றி தாமதமாக கிடைக்கும்.

பெண்களுக்கு அடுத்தவர்கள் பேச்சை கேட்டு எதிலும் ஈடுபடாமல் இருப்பது நன்மை தரும். அரசியல்துறையினருக்கு உங்கள் புத்திக்கூர்மை உங்களுக்கு வெற்றியைத் தேடித் தரும். போட்டிகளையும், பொறாமைகளையும் சந்தித்தாலும் பொறுமையுடன் செயல்பட்டு அவற்றைச் சமாளிப்பீர்கள். மாணவர்களுக்கு எவ்வளவு திறமையாக படித்தாலும்பாடங்கள் கடினமானவை போல தோன்றும்.

## கடகம்

கவலைகளை வெளிக்காட்டாமல் எப்போதும் சிரித்த முகத்துடன் காணப்படும் கடக ராசிக்காரர்களே, இந்த மாதம் சுணங்கிக் கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறும். எதிர்பார்த்த காரியங்களை வெற்றிகரமாக செய்து முடிக்க கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். பெண்களுக்கு கொடுத்த வாக்கை காப்பாற்றும் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள். அடுத்தவரை பற்றி எந்த பேச்சும் பேசாமல் இருப்பது நல்லது. கலைத்துறையினர் மிகப் பெரிய உதவிகளைச் செய்து பாராட்டுகளைப் பெறுவீர்கள். மாணவர்களுக்கு கல்வி தொடர்பான விஷயங்களில் நேரடியாக கவனம் செலுத்துவது நல்லது.

## சிம்மம்

துணிச்சலாக எதையும் செய்து வெற்றி பெறும் சிம்ம ராசியினரே இந்த மாதம் வீண் அலைச்சல் காரிய தடை ஆகியவை அகலும். தடை நீங்கி காரியங்கள் நடந்து முடியும். அலைச்சல் ஏற்பட்டாலும் எடுத்த முயற்சி கைகூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். கணவன், மனைவி இருவரும் மனம் விட்டு பேசுவது நல்லது. குடும்ப விஷயங்களை அடுத்தவரிடம் கூறி ஆலோசனை கேட்பதை தவிர்ப்பது நன்மை தரும். குழந்தைகள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள். அரசியல்துறை யினருக்கு காரிய அனுகூலம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் வெற்றி பெற எல்லா முயற்சிகளையும் மேற்கொள் வீர்கள்.

## கன்னி

வாக்கு நாணயம் தவறாமலும் உண்மைக்காக பாடுபடும் குணமும் உடைய கன்னி ராசியினரே, இந்த மாதம் சுணங்கி கிடந்த காரியங்கள் அனைத்தும் வேகம் பெறுவதோடு மட்டுமல்லாமல் மனதில் புது திட்டங்கள் உருவாகும். பெண்களுக்கு கடன் பிரச்சனைகள் குறையும். புதிய எண்ணங்கள் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

உங்களது சொத்து தொடர்பான விவகாரங்களில் தாமதம் ஏற்படும். பக்தியில் நாட்டம் அதிகமாகும். இந்த மாதம் குடும்பத்தில் இருப்பவர்களுடன் ஏதாவது ஒருவகையில் வாக்குவாதம் உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே சிறுசிறு மனஸ்தாபம் உண்டாகும்.

## துலாம்

நடக்காது என்று எதையும் நினைக்காமல் எல்லாவற்றையும் செய்ய வேண்டும் என்ற துடிப்புடைய துலா ராசியினரே, இந்த மாதம் சுபகாரியங்களில் இருந்து வந்த தடங்கல்கள் நீங்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். . புது நபர்கள் கூறும் வியாபாரம் தொடர்பான விஷயங்களில் முடிவு எடுக்கும் போது கவனமாக இருப்பது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களுடன் கோபமாக பேசும் சூழ்நிலை ஏற்படும். கவனமாக இருப்பது நல்லது. மனைவி குழந்தைகளின் உடல்நலத்தில் கவனம் தேவை. சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். அரசியல்துறையினருக்கு முன்னேற்றம் கிடைக்கும்.

## விருச்சிகம்

மற்றவர்களை அறிந்து அவர்களுக் கேற்ப நடந்து கொண்டு காரியம் சாதிக்கும் திறமை உடைய விருச்சிக ராசியினரே, இந்த மாதம் உங்களின் சாமர்த்தியமான பேச்சின் மூலம் காரியவெற்றி உண்டாகும். குடும்பத்தில் சுப காரியம் நடக்கும். பூமி மூலம் லாபம் கிடைக்கும் வாழ்க்கை துணைக்கு தேவையான வசதிகள் செய்து தருவீர்கள். பெண்களுக்கு திறமையான பேச்சின் மூலம் காரியவெற்றி உண்டாகும். இந்த மாதம் குடும்பத்தில் இருந்த சண்டைகள் நீங்கும். கணவன், மனைவி ஒருவருக் கொருவர் புரிந்து கொண்டு செயல்படுவார்கள். பிள்ளைகள் மூலம் பெருமை உண்டாகும். புத்திசாதுரியத்தால் பொருள் சேர்க்கை ஏற்படும். தாய்வழி உறவினர் மூலம் உதவிகள் கிடைக்கும்.

## தனுசு

சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்புடன் இருக்கும் தனுசு ராசியினரே, இந்த மாதம் எதிர்பார்த்த காரியங்கள் மனதுக்கு திருப்தி அளிக்கும் விதத்தில் நடந்து முடியும். கடன் சுமை குறையும். எதிர்ப்புகள் அகலும். தொழில், வியாபாரத்தில் கடினமான முயற்சிக்கு பிறகு எதிர்பார்த்த லாபம் வந்து சேரும். வாழ்க்கை துணையின் ஆலோசனை உங்கள் முன்னேற்றத்திற்கு உதவும். எதிர்பாராமல் ஏற்படும் குடும்ப செலவை சமாளிக்க தேவையான பண உதவியும் கிடைக்கும். சுக்கிரன் சஞ்சாரத்தால் வீட்டிற்கு தேவையான வசதிகள் கிடைக்கும். நண்பர்கள், உறவினர்கள் மூலம் தேவையான உதவிகளும் கிடைக்க பெறுவீர்கள்.

## மகரம்

பொது காரியங்களில் விருப்பம் உள்ள மகர ராசியினரே நீங்கள் திறமை சாலிகளாகவும் இருப்பீர்கள். இந்த மாதம் அறிவு திறன் கூடும். இனிமையான பேச்சின் மூலம் பலரது உதவிகள் கிடைக்க பெறுவீர்கள். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும். பலவகை முன்னேற்றங்களும் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலாகும். பெண்களுக்கு அறிவு திறமை அதிகரிக்கும். இனிமையான பேச்சின் மூலம் எதிலும் வெற்றி கிடைக்கும். கலைத்துறையினர் அதீத கவனத்துடன் செயல்படுவது உங்களுக்கு பதவி உயர்வு மற்றும் வெற்றியைத் தேடித்தரும். அரசியல்துறையினருக்கு கவனம் தேவை.

## கும்பம்

எந்த காரியத்தையும் தீர ஆலோசித்து அதில் ஈடுபடும் குணமுடைய கும்ப ராசியினரே இந்த மாதம் எல்லா காரியங்களும் முன்னேற்றமாக நடக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். புதிய தொடர்புகள் ஏற்படும். தொழில், வியாபாரம் தொடர்பான காரியங்களில் தாமதபோக்கு காணப்படும். குடும்பத்தில் தீடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். கணவன் மனைவிக் கிடையே எதையும் பேசி தெளிவுபடுத்திக் கொள்வது நன்மை தரும். குழந்தைக ளுக்கான பொருட்களை வாங்குவீர்கள். பெண்களுக்கு இழுபறியாக இருந்த காரியங்கள் முடிவுக்குவரும். கலைத் துறையினர் பொறுப்புகள் அதிகரிக்கும். அரசியல்துறையினருக்கு எடுத்த காரியத்தை எப்படியும் செய்து முடித்து விடுவீர்கள்.

## மீனம்

நீதி, நேர்மை, உண்மை என்று எப்போதும் பாடுபடும் மீன ராசியினரே, நீங்கள் எதிர்ப்புகளை எளிதில் வெல்லுவீர்கள். இந்த மாதம் எந்த ஒரு சின்ன விஷயம் கூட லாபமாக நடந்து முடியும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட கூடுதல் லாபம் கிடைக்கும். வங்கியில் இருப்பு கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சியும், அமைதியும் உண்டாகும். பெண்களுக்கு எல்லா வற்றிலும் லாபம் கிடைக்கும். மரியாதை அந்தஸ்து கூடும். கலைத்துறையினர் வாக்கு வன்மையால் சிறப்பாக நடக்கும். அரசியல்துறையினருக்கு இருந்த குழப்பம் நீங்கும். மாணவர்களுக்கு கல்வியில் கூடுதல் மதிப்பெண் கிடைக்க எடுக்கும் முயற்சிகளில் சாதகமான பலன் கிடைக்கும்.எளஎ


NS Systems
SECURITY
1300 108 555
REALTIME
SECURITY SYSTEM
PROTECTION
IP / HD CCTV Systems
Alarm Monitoring
Access Control
Video Intercom
Security Fog System
Smart Home
Data & Tele-communication
Security Alarm
Ducted Vacuum
Solar CCTV
Digital TV Antenna
UTECH SOLUTIONS
Corporate Group
Protect your Home & Family, Secure your Premises & Business.
1300 108 555 / 0447 533 555
www.nssystems.com.au / info@nssystems.com.au


Transsco™
CARGO
இனிய புது வருட வாழ்த்துக்கள்!
புதுவருட அட்டவணை
MONTH | FINAL CUT-OFF DATE | EST ARRIVAL IN SL
January 2022-01-08 2022-02-15
January 2022-01-15* 2022-02-22
January 2022-01-22 2022-03-01
January 2022-01-29* 2022-03-08
February 2022-02-05 2022-03-15
February 2022-02-12* 2022-03-22
February 2022-02-19 2022-03-29
February 2022-02-26* 2022-04-05
March 2022-03-05 2022-04-12
March 2022-03-12* 2022-04-19
March 2022-03-19 2022-04-26
March 2022-03-26* 2022-05-03
April 2022-04-02 2022-05-10
April 2022-04-09* 2022-05-17
April 2022-04-23 2022-05-31
April 2022-04-30* 2022-06-07
* Only at Campbellfield & Dandenong Transco offices.
Door Delivery Anywhere in Sri Lanka
#1 FREIGHT FORWARDER FROM AUSTRALIA TO SOUTH ASIA
Transco™ CARGO
Australia's Number One Freight Forwarder to South Asia
BUY 2 BOXES and get the 3RD BOX FREE
45 Adrian Rd, CAMPBELLFIELD - (03) 9357 7228
206-208 Discovery Road, DANDENONG SOUTH - (03) 9703 2255
follow us on
We love to deliver
SYDNEY - 02 9897 0004 | BRISBANE - 07 3219 0203 | ADELAIDE - 08 8322 8825 | PERTH - 08 9452 7707 | CANBERRA - 02 62821905 | DARWIN - 08 79790002 | TASMANIA - 03 90174167
1300 1 TRANSCO (1300 187 267) | WWW.TRANSCOCARGO.COM.AU